# II. 1961ம் ஆண்டு பொருளாதார, நிதி நிலைமைகளின் போக்கு

## (அ) தேசிய உற்பத்தியும் செலவும்

**முன்னுரை**

1961ம் ஆண்டிற்கான மொத்த தேசிய உற்பத்தி, நடைமுறைச்சினைக் கொள் விலைகளின்படி 62,740 இலட்சம் ரூபாய்களென தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள் ளது. முந்தைய இரு ஆண்டுகளுக்கான திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீடுகளா வன (1)—1960ல் 61,270 இலட்சம் ரூபாய்களும், 1959ல் 58,440 இலட்சம் ரூபாய்க ளும் ஆகும். எனவே 1960ம் ஆண்டிலும் பார்க்க 1961ல் மொத்த தேசிய உற்பத்தி 2.4 சதவீதத்தால் அதிகரித்திருக்க, 1960ம் ஆண்டில் ஏற்பட்ட அதிகரிப்பு 4.8 சத வீதமாகும்.

1961ம் ஆண்டின் மொத்த தேசிய உற்பத்தியில் ஏற்பட்ட சிறிய அளவான அதி கரிப்பை, ஏற்றுமதிப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி பெருமளவில் விளக்குகின்றது. ஏற்றுமதிகளின் அளவில் ஒரு பொதுப்படையான அதிகரிப்பு ஏற் பட்ட பொழுதிலும்—தேயிலை ஏற்றுமதிகளின் அளவு ஒரு நியாயமான அதிகரிப்பை யும், தெங்கு ஏற்றுமதிகள் ஒரு கணிசமான அளவு அதிகரிப்பையும் காட்டுகின்றன— ஏற்றுமதி விலைவாசிகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் பயனாக நடைமுறை விலைகளிலுள்ள ஏற்றுமதிப் பொருட்களின் பெறுமானம் வீழ்ச்சியுற்றது. எனினும் நிலையான விலைக ளின்படி மொத்த தேசிய உற்பத்தியின் மதிப்பளவைக் கணக்கிடுகையில், அதாவது விலைவாசிகளில் ஏற்பட்ட மாற்றங்களின் பயன்கள் நீக்கப்பட்ட பின்னர், 1960ம் ஆண்டிலும் பார்க்க 1961ல் ஏற்பட்ட மொத்தத் தேசிய உற்பத்தியின் பூரண அதி கரிப்பு, நடைமுறை விளைகளின்படி உள்ள அதிகரிப்பிலும் பார்க்கக் கூடியதாகும். இது அட்டவணை II—1ல் காட்டப்பட்டுள்ள சினைக் கொள்விலைகளின்படியுள்ள மொத்த தேசிய உற்பத்தியிலிருந்தும், நடைமுறை விலைகளிலும், நிலையான 1956ம் ஆண்டு விலைகளிலும், நிலையான 1959ம் ஆண்டு விலைகளிலும் உள்ள உற்பத்தியின தும் செலவினதும் சுருக்கக் காட்டியிலிருந்தும், வெளியாகின்றது. (2)

நிலையான 1956ம் ஆண்டு விலைகளில், 1960ம் ஆண்டிற்கும் 1961ம் ஆண்டிற்கு மான மொத்தத் தேசிய உற்பத்தியின் வருடாந்த அதிகரிப்புகள் முறையே 5.3 சத வீதமாகவும், 3.6 சதவீதமாகவும் காணப்பட்டன. நிலையான 1959ம் ஆண்டு விலை களில், இவ்வாண்டுகளுக்கான வருடாந்த அதிகரிப்புகள் முறை 5.1 சதவீதமாகவும், 4.2 சதவீதமாகவும் காணப்பட்டன(3). குடிசனத்தொகை வளர்ச்சியைக் கவனிக் கும் பொழுது—1959ம் ஆண்டு நடுப்பகுதிக்கும், 1960ம் ஆண்டு நடுப்பகுதிக்கும் இடையில் மதிப்பிடப்பட்ட குடிசனத் தொகை 2.8 சதவீதத்தாலும், 1960ம் ஆண்டு நடுப்பகுதிக்கும், 1961ம்ஆண்டு நடுப்பகுதிக்கும் இடையில் 2.7 சதவீதத்தாலும் அதிகரித்துள்ளன—1960ல் பண நியதியின்படி சராசரி ஆளுக்கான மொத்தத் தேசிய உற்பத்தி 2.0 சதவீதத்தால் அதிகரித்ததாயினும், 1961ல் இது 0.4 சதவீதத்தால் சிறிதளவு வீழ்ச்சியுற்றது. எனினும் 1960ம், 1961ம் ஆண்டுகளில், நிலையான 1956ம் ஆண்டு விலைகளின்படி மதிப்பிடப்பட்ட சராசரி ஆளுக்கான உண்மை உற்பத்தி முறையே 2.4 சதவீதத்தாலும், 0.9 சதவீதத்தாலும் அதிகரித்தது. நிலையான 1959ம் ஆண்டு விலைகளின்படி, இவ்வாண்டுகளில் ஏற்பட்ட சராசரி ஆளுக்கான உண் மை உற்பத்தியின் அதிகரிப்புகள் முறையே 2.3 சதவீதமாகவும், 1.3 சதவீதமாகவும் காணப்பட்டன.

---

(1) இப்பொழுது தரப்படும் 1959ம், 1960ம் ஆண்டுகளுக்கான மதிப்பீடுகள், முன்னர் பிரசுரிக்கப்பட்ட குடிசன மதிப்புப்புள்ளி விபரத் திணைக்களத்தினதும், இலங்கை மகாவங்கியினதும் மதிப்பீடுகளுடன் பல காரணங்களால் வேறுபடுகின்றன. அக்காரணங்களுள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை தேசிய உற்பத்தி, செலவு பற்றிய குறிப்புரையில் கொடுக்கப்பட்டுள்ளன.

(2) நிலையான விலைப் பெறுமானங்கள் வெவ்வேறு அடிப்படை வருடங்களின் விலைகளில், சாதாரணமாக ஒப்பியல்பாகும் விளைவுகளைத் தரமாட்டா. ஏனெனில் வெவ்வேறு அடிப்படை வருடங்களுக்கு இடையே உள்ள விலைவாசிகளின் அமைப்பிலுள்ள வேற்றுமைகள், நிலையான மொத்த விலைகளில் கணிக்கப்படும்பொழுது, அவை அமைப்பு விடயங்களின் முக்கியத்துவத்தைப் பாதிக்கும். நிலையான 1959ம் ஆண்டு விலைகளிலுள்ள விலைமதிப்புக்கள். நிலையான 1956ம் ஆண்டு விலைகளிலுள்ள விலைமதிப் புக்களிலும் பார்க்கச் சிறிது கூடிய அளவு நம்பிக்கையுள்ளதாகத் தெரிகின்றது. ஏனெனில் 1956ம் ஆண்டிலும் பார்க்க 1959ம் ஆண்டிற்குரிய விலைவாசிகளைப் பற்றியே கூடிய திருப்திகரமான விபரங் கள் கிடைக்கக்கூடியதாக இருக்கின்றது. ஆயினும் இவ்வறிக்கையில் நிலையான 1956ம் ஆண்டு விலை களிலுள்ள விலைமதிப்புக்கள், நிலையான 1959ம் ஆண்டு விலைகளிலுள்ள விலை மதிப்புக்களுடன் ஒருங் கே காட்டப்பட்டுள்ளதற்குக் காரணம், முந்தைய வருடாந்த அறிக்கைகளில் கொடுக்கப்பட்டுள்ள நிலையான விலை மதிப்பீடுகள், நிலையான 1956ம் ஆண்டு விலைகளைத் தழுவிக் கணிக்கப்பட்டிருப்பதே,

(3) இதற்கு முன்னுள்ள அடிக்குறிப்பில் கூறப்பட்டுள்ளபடி, நிலையான 1956ம் ஆண்டு விலைகளிலுள்ள விலை மதிப்புக்களிலும், நிலையான 1959ம் ஆண்டு விலைகளிலுள்ள விலை மதிப்புக்களிலும், ஏற்பட்ட வேறுபாடுகளின் விலைவுகள், வெவ்வேறு அடிப்படை ஆண்டுகளுக்கான விலைவாசிகளில் வேறுபட்ட முக்கியத்துவங்கள் பாவிக்கப்பட்டதின் விளைவாக ஏற்பட்டன.

## அட்டவணை II—1

### உற்பத்தியினதும், செலவினதும் சுருக்கமான காட்டிகள்

| | நடைமுறை விலைகளின்படி | | | நிலையான 1956ம் ஆண்டு விலைகளின்படி | | | நிலையான 1959ம் ஆண்டு விலைகளின்படி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1959 | 1960 | 1961 | 1959 | 1960 | 1961 | 1959 | 1960 | 1961 |
| **அ. பெறுமானங்கள்** | | | | | | | | | |
| 1. சினைக்கொள்விலைகளின்படி மொத்த தேசிய உற்பத்தி (பத்து இலட்சம் ரூபாய்களில்) | 5844 | 127 | 6274 | 5557 | 5850 | 6060 | 5844 | 6141 | 6396 |
| 2. சந்தை விலைகளின்படி நுகர்ச்சிச் செலவும், மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கமும் (பத்து இலட்சம் ரூபாய்களில்) | 6549 | 6782 | 6735 | 6389 | 6625 | 6609 | 6549 | 6769 | 6776 |
| 3. சந்தை விலைகளின்படி தனிப்பட்டோர் நுகர்ச்சி (பத்து இலட்சம் ரூபாய்களில்) | 4448 | 4709 | 4625 | 4451 | 4710 | 4668 | 4448 | 4699 | 4666 |
| 4. சந்தை விலைகளின்படி அரசாங்க நுகர்ச்சி (ப. இ. ரூபாய்களில்) | 1050 | 1076 | 1067 | 1036 | 1063 | 1053 | 1050 | 1075 | 1063 |
| 5. சந்தை விலைகளின்படி மொத்த நிலையான உள்நாட்டு மூலதன ஆக்கம் (ப.இ. ரூபாய்களில்) | 1051 | 991 | 1062 | 903 | 848 | 904 | 1051 | 989 | 1066 |
| 6. பொருட்களினதும், சினைக்கொள் அல்லாத சேவைகளினதும் ஏற்றுமதிகள்(1) (ப.இ. ரூபாய்களில்) | 2016 | 2011 | 1913 | 2074 | 2071 | 2154 | 2016 | 2013 | 2093 |
| 7. பொருட்களினதும், சினைக்கொள் அல்லாத சேவைகளினதும் இறக்குமதிகள் (2) (பத்து இலட்சம் ரூபாய்களில்) | 2176 | 2209 | 1969 | 2187 | 2204 | 1989 | 2176 | 2193 | 1979 |
| 8. சினைக்கொள் விலைகளின்படி சராசரி ஆளுக்குரிய மொத்த தேசிய உற்பத்தி (3) (ரூபாய்களில்) | 607 | 619 | 617 | 577 | 591 | 596 | 607 | 621 | 629 |
| 9. சந்தை விலைகளின்படி சராசரி ஆளுக்குரிய நுகர்ச்சிச் செலவும் (3) மொத்த உள்நாட்டு மூலதனஆக்கமும் (ரூபாய்களில்) | 680 | 685 | 662 | 664 | 669 | 650 | 680 | 684 | 666 |
| **ஆ. குறிகாட்டிப் புள்ளிகள் (1959=100.0)** | | | | | | | | | |
| 1. சினைக் கொள்விலைகளின்படி மொத்த தேசிய உற்பத்தி .. | 100.0 | 104·8 | 107·4 | 100·0 | 105·3 | 109·1 | 100·0 | 105·1 | 109·4 |
| 2. சந்தை விலைகளின்படி நுகர்ச்சிச் செலவும், மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கமும் .. | 100·0 | 103·6 | 102·8 | 100·0 | 103·7 | 103·4 | 100·0 | 103·4 | 103·5 |
| 3. சந்தை விலைகளின்படி தனிப்பட்டோர் நுகர்ச்சி .. | 100·0 | 105·9 | 104·0 | 100·0 | 105·8 | 104·9 | 100·0 | 105·6 | 104·9 |
| 4. சந்தை விலைகளின்படி அரசாங்க நுகர்ச்சி .. | 100·0 | 102·5 | 101·6 | 100·0 | 102·6 | 101·6 | 100·0 | 102·4 | 101·2 |
| 5. சந்தை விலைகளின்படி மொத்த நிலையான உள்நாட்டு மூலதன ஆக்கம் .. | 100·0 | 94·3 | 101·0 | 100·0 | 93·9 | 100·1 | 100·0 | 94·1 | 101·4 |
| 6. பொருட்களினதும், சினைக்கொள் அல்லாத சேவைகளினதும் ஏற்றுமதிகள் (1) .. | 100·0 | 99·8 | 94·9 | 100·0 | 99·9 | 103·9 | 100·0 | 99·9 | 103·8 |
| 7. பொருட்களினதும், சினைக்கொள் அல்லாத சேவைகளினதும் இறக்குமதிகள் (2) .. | 100·0 | 101·5 | 90·5 | 100·0 | 100·8 | 90·9 | 100·0 | 100·8 | 90·9 |
| 8. சினைக் கொள்விலைகளின்படி சராசரி ஆளுக்குரிய மொத்த தேசிய உற்பத்தி (3) .. | 100·0 | 102·0 | 101·6 | 100·0 | 102·4 | 103·3 | 100·0 | 102·3 | 103·6 |
| 9. சந்தை விலைகளின்படி சராசரி ஆளுக்குரிய நுகர்ச்சிச்செலவும்(3) மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கமும் .. | 100·0 | 100·7 | 97·4 | 100·0 | 100·8 | 97·9 | 100·0 | 100·6 | 97·9 |

மூலம்: இலங்கை மகா வங்கி

(1) ஏற்றுமதி செய்யப்பட்ட வணிகப் பொருட்களின் பெறுமானம் (ஏற்றுமதி விலைகளின்படி)

(2) இறக்குமதி செய்யப்பட்ட வணிகப் பொருட்களின் பெறுமானம் (இறக்குமதி விலைகளின்படி)

(3) கீழ்க்காணும் குடிசனத்தொகை மதிப்பீடுகள் பாவிக்கப்பட்டுள்ளன:

| | 1959 | 1960 | 1961 |
|---|---|---|---|
| ஆண்டு நடுப்பகுதியில் குடிசனத்தொகை .. | 9,625,000 | 9,896,000 | 10,167,000 |
| குறிகாட்டிப் புள்ளிகள் .. | 100·0 | 102·8 | 105·6 |

அட்டவணை II—1ன் விடயம் அ. 2. நுகர்ச்சிக்கான மொத்தச் செலவையும், சந்தை விலைகளின்படி மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கத்தையும் காட்டுகின்றது. நடைமுறை விலைகளில் 1960ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 1961ல் இம்மொத்தம் 0.7 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. நிலையான 1956ம் ஆண்டு விலைகளில் இவ்வீழ்ச்சி 0.2 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டு நிலையான 1959ம் ஆண்டு விலைகளில் இஃது 0.1 சதவீத சிறு உயர்ச்சியாக மாறியது. 1961ம் ஆண்டிற்குரிய சராசரி ஆளுக்குரிய நுகர்ச்சிச் செலவினதும், மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கத்தினதும் பெறுமானங்களை, 1960ம் ஆண்டுடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது, நடைமுறை விலைகளிலுள்ள மதிப்பீடுகளிலும், நிலையான விலைகளிலுள்ள இரு மதிப்பீடுகள் ஒவ்வொன்றிலும், குறிப்பிடும்படியான வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதைக் காணலாம்.

1961ம் ஆண்டில் நுகர்ச்க்கான மொத்தச் செலவிலும், மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கத்திலும் ஏற்பட்ட வீழ்ச்சி தனிப்பட்டோர் நுகர்ச்சியில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சியின் பயனாகவும், அரசாங்க நுகர்ச்சியில் ஏற்பட்ட சிறிய அளவான வீழ்ச்சியின் விளைவாகவும் ஏற்பட்டது. (1) மறு பக்கத்தில் நிலையான மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் (அட்டவணை II—1ன் விடயம் அ. 5) 1960ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1961ல் கணிசமான அளவால் உயர்ந்தது. இந்த அதிகரிப்பு, நடைமுறை விலைகளின்படி 7.2 சதவீதமாகவும், நிலையான 1956ம் ஆண்டு விலைகளின்படி 6.6 சதவீதமாகவும், நிலையான 1959ம் ஆண்டு விலைகளின்படி 7.5 சதவீதமாகவும் விளங்கிற்று. நுகர்ச்சிக்கான மொத்தச் செலவும், மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கமும் மட்டமாகின்ற அல்லது வீழ்ச்சியடைகின்ற ஒரு நேரத்தில், மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கத்தில் அதிகரிப்பு ஏற்படுவது, திருப்தியளிக்கும் ஒரு அம்சமெனக் கருதவேண்டும். கையிருப்புக்களில் ஏற்பட்ட ஒப்பியல்வாகும் மாற்றங்களையும் (2) சேர்த்துக் கணிக்கும்பொழுது, மொத்த மூலதன ஆக்கம் (கீழேயுள்ள அட்டவணை II—11ன் விடயம் 'இ' பார்க்கவும்.) 1961ம் ஆண்டு நடைமுறை விலைகளின்படி 4.6 சதவீதத்தாலும், நிலையான 1956ம் ஆண்டு விலைகளின்படியும், நிலையான 1959ம் ஆண்டு விலைகளின்படியும் முறையே 4.2 சதவீதத்தாலும், 5.3 சதவீதத்தாலும் அதிகரித்தது.

அட்டவணை II—1ன் அ. 6ம், அ. 7ம் விடயங்கள் பொருட்களிலும், சேவைகளிலும் வெளிநாடுகளுடன் உள்ள வியாபாரம் சம்பந்தமான நிலையைக் காட்டுகின்றன. உண்மை நியதியின்படி, ஏற்றுமதிகள் உயர்ந்துக்கொண்டு சென்ற போதிலும், ஏற்றுமதி வருமானங்கள் 1960ம் ஆண்டு மட்டத்திலும் பார்க்கச் சிறிது குறைந்ததாகும். 1960ம் ஆண்டில் எக்காலத்திலும் இல்லாத உச்ச நிலையை அடைந்த பொருட்களினதும், சேவைகளினதும் இறக்குமதிகள் 1961ம் ஆண்டில், பண நியதியின்படி 11 சதவீதத்தாலும், உண்மை நியதியின்படி 10 சதவீதத்தாலும் வீழ்ச்சியுற்றன.

பண நியதியின்படி உற்பத்தியும் செலவும்

அட்டவணை II—2ல் நடைமுறைச்சினைக் கொள்விலைகளின்படி கணிக்கப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் மதிப்பீடுகள் விரிவாகக் காட்டப்பட்டுள்ளன.

இறக்குமதியடக்கத்தை விலக்கிய ஏற்றுமதிக்கான உற்பத்தியின் விளைவு (3) 1961ம் ஆண்டில் 2.6 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றமை, 1960ல் ஏற்பட்ட 2.8 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடத்தக்கது. 1960ம் ஆண்டில் உள்நாட்டு உபயோகத்திற்கான உற்பத்தியின் நிகர விளைவு 5.7 சதவீதத்தால் அதிகரித்ததற்கெதிராக, 1961ல் இது

(1) இலங்கையில் முன்னர் காணப்பட்ட முறையைப் பின்பற்றியும், ஐக்கிய நாடுகள் சபையின் நியமங்களுக்கிணங்கவும், அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், சில அரசாங்க முயற்சிகள் (அதாவது புகையிரதத் சேவையும், மின்சார திணைக்கள சேவையும்) ஆகியனவற்றின் நுகர்ச்சி, மூலதன ஆக்கம் முதலியன தனிப்பட்டோர் நுகர்ச்சி, தனிப்பட்டோர் மூலதன ஆக்கம் ஆகிய தொகுதிகளில் அடக்கப்பட்டுள்ளன. கூட்டுத்தாபனங்கள் அரசாங்க முயற்சிகள் ஆகியனவற்றின் நுகர்ச்சி, மூலதன ஆக்கம் முதலியனவற்றை (இங்கே விபரித்தபடி) தனிப்பட்டோர் துறையினது இதர பகுதிகளின் நுகர்ச்சி மூலதன ஆக்கம் முதலியவற்றிலிருந்து உடனடியாகப் பிரித்தல் இயலாது. ஏனெனில், கையாளப்பட்ட முறைகள், குறிப்பாக, மூலதன ஆக்கத்தை மதிப்பிடுவதற்கு கையாளப்பட்ட முறைகள் மறைமுகமான இயல்புடையன ஆகும்.

(2) தேயிலை, இரப்பர், கால்நடை முதலியனவற்றின் கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்கள், தனிப்பட்டோர் துறையின் மொத்த மூலதன ஆக்க மதிப்பீடுகளுடன் சேர்த்து கணிக்கப்பட்டுள்ளன. உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழ் உள்ள நெல்லின் கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்கள் அரசாங்கத்துறையின் மொத்த மூலதன ஆக்க மதிப்பீடுகளுடன் சேர்த்துக் கணிக்கப்பட்டுள்ளது.

(3) ஏற்றுமதிக்கான உற்பத்தியின் விளைவு, கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்களுக்குத் திருத்தியமைக்கப்பட்டபின் உள்நாட்டு ஏற்றுமதிகளின் விளைவுக்குச் சமமாகும்.

## அட்டவணை II–2

## நடைமுறைச் சிணைக்கொள்விலைகளின்படி மொத்தத் தேசிய உற்பத்தி

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1959 | 1960 | 1961 | சதவீத மாற்றம் 1959ல் இருந்து 1960ம் ஆண்டு | சதவீத மாற்றம் 1960ல் இருந்து 1961ம் ஆண்டு |
|---|---|---|---|---|---|
| **I. ஏற்றுமதிக்கான உற்பத்தி** | | | | | |
| (i) உள்நாட்டு ஏற்றுமதிகள்: ஏற்றுமதி விலைப் பெறுமானம் .. .. | 1,692 | 1,775 | 1,681 | + 4·9 | — 5·3 |
| கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றத்தின் பெறுமானம் | ... | —37 | +19 | | |
| இறக்குமதி செய்து உபயோகித்த பொருட்களைத் தவிர்த்து .. .. | —82 | —82 | —86 | | |
| நிகர உற்பத்தி .. .. | 1,610 | 1,657 | 1,613 | + 2·9 | — 2·6 |
| (ii) திருப்பி ஏற்றுமதி செய்யப்பட்டவைகள்: கூட்டப் பட்ட பெறுமானம் .. .. | 3 | 2 | 2 | —20·0 | — |
| **ஏற்றுமதிக்கான மொத்த உற்பத்தி நிகர உற்பத்தி** .. .. | **1,613** | **1,659** | **1,615** | **+ 2·8** | **— 2·6** |
| **II. உள்நாட்டு பாவனைக்கான உற்பத்தி (நிகர உற்பத்தி)** | | | | | |
| (i) விவசாயமும், வனவியலும், கால்நடையும், மீன்பிடித் தலும் .. .. | 1,211 | 1,327 | 1,368 | + 9·6 | + 3·1 |
| (ii) கைத்தொழில் (முன்பு சேர்க்கப்படாதவைகள்) .. | 321 | 354 | 375 | +10·2 | + 5·8 |
| (iii) மூலதன அபிவிருத்தி (பொருட்களும் சேவைகளும்) .. | | | | | |
| (அ) அரசாங்கத் துறை .. .. | 342 | 314 | 418 | — 8·3 | +33·3 |
| (ஆ) தனிப்பட்டோர் துறை .. | 246 | 249 | 249 | + 1·4 | — 0·1 |
| (iv) குடியிருப்புக்களின் உடமை .. .. | 144 | 154 | 167 | + 7·5 | + 8·4 |
| (v) உத்தியோகச் சேவைகள், சொந்தச் சேவைகள், வீட்டுச் சேவைகள் .. | 437 | 443 | 450 | + 1·4 | + 1·6 |
| (vi) வர்த்தகம் (அரசாங்கமல்லாதவையும், ஏற்றுமதியல் லாதவையும்) .. .. | 502 | 524 | 486 | + 4·4 | — 7·2 |
| (vii) போக்குவரத்து (அரசாங்கமல்லாதவையும், ஏற்றுமதி யல்லாதவையும்) .. .. | 307 | 331 | 330 | + 8·0 | — 0·5 |
| (viii அரசாங்கம் (முன்பு சேர்க்கப்படாதவைகள்) .. | 759 | 816 | 856 | + 7·6 | + 4·9 |
| **மொத்தம்** .. .. | **4,268** | **4,513** | **4,699** | **+ 5·7** | **+ 4·1** |
| **III. மொத்த உள்நாட்டு உற்பத்தி** .. .. | **5,881** | **6,171** | **6,314** | **+ 4·9** | **+ 2·3** |
| **IV. வெளிநாட்டிலிருந்து வந்த நிகர வருமானம்** .. | **—37** | **—44** | **—40** | | |
| **V. மொத்தத் தேசிய உற்பத்தி** .. .. | **5,844** | **6,127** | **6,274** | **+ 4·8** | **+ 2·4** |

விடயங்களின் விளக்கம்

(1) அரசாங்க விடயங்கள் II (iii) (அ) வும், (II) (viii) ம் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களையும் சில அரசாங்க முயற்சிகளையும் (அதாவது புகைவண்டி, மின்சாரத் திணைக்களங்கள்) விலக்கியே விளக்கப்பட்டுள்ளன. அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் அரசாங்க முயற்சிகள் ஆகியனவற்றின் நிகர உற்பத்தி ஏனைய விடயங்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

(2) விடயம் II (viii) (அரசாங்கம் முன்பு சேர்க்கப்படாதவைகள்), அரசாங்கக் கட்டடங்களின் கணிக்கப்பட்ட வாடகைகளையும் சேர்த்துள்ளது.

(3) அரசாங்கத் துறையில் மூலதன அபிவிருத்தியின் பயனாக ஏற்பட்ட நிகர உற்பத்தி, [விடயம் II (iii) (அ)] பின்வருவனவற்றையும் அடக்கியுள்ளது.

(அ) ஒப்பந்தத்தில் செய்யப்பட்ட அரசாங்க மூலதன வேலைகளின் நிகர உற்பத்தி.

(ஆ) மூலதன அபிவிருத்தியில் ஈடுபடும்போது, ஏற்படுகின்ற சார்புச் சேவைகள், உதாரண மாக, அரசாங்கத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட மூலதனப் பொருட்களை ஏற்றி இறக் குதல் போன்றவை.

(4) தனிப்பட்டோர் துறையில் மூலதன அபிவிருத்தியின் பயனாக ஏற்பட்ட நிகரவிளைவு [விடயம் II (iii) (ஆ)], பின்வருவனவற்றை அடக்கியுள்ளது. (அ) கட்டட ஆக்கத் தொழில்களின் நிகர விளைவு (ஆ) கட்டட ஆக்கப் பொருட்களையும் உள்நாட்டு உபயோகத்திற்கான ஏனைய மூலதனப் பொருட்களையும் உற்பத்தி செய்கின்ற கைத்தொழில்களின் நிகர விளைவு (இ) பயிர் நடுகையின தும் மாற்று நடுகையினதும் நிகர விளைவு.

பொதுக்குறிப்புகள்:

(1) பிரசுரிக்கப்பட்ட மூலங்கள் (இலங்கைச் சுங்கப்புள்ளி விபரங்கள் போன்றவை), சில குறித்த விடயங்களின் விசேட மூலங்கள் (உதாரணமாக, கைத்தொழில் உற்பத்தி பற்றி கைத்தொழில் திணைக்களம்) ஆகியனவற்றைத் தவிர இந்த அட்டவணையையும், "மொத்த தேசிய செலவு" அட்டவணையையும் தயாரிக்கத் தேவையான சகல விபரங்களும் குடிசனத்தொகை மதிப்பு, புள்ளி விபரத் திணைக்களத்தினால் கொடுக்கப்பட்டவை.

(2) அட்டவணைகளிலுள்ள எண்கள் மட்டமாக்கப்பட்டதின் காரணமாக விடயங்களின் எண்தொகைகள் கூட்டப்படும் பொழுது, அவை மொத்தங்களுடன் சரியாக ஒத்துவரமாட்டா.

(3) 1961ம் ஆண்டுக்கான உற்பத்தி, செலவு ஆகியனவற்றின் மதிப்பீடுகள் தற்காலிகமானவை.

4.1 சதவீதத்தால் அதிகரித்தது. உள்நாட்டு உபயோகத்திற்கான உற்பத்தி பற்றிய குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால் விவசாயம், வனவியல், கால்நடை, மீன் பிடித்தல் ஆகிய தொகுதியின் அதிகரிப்பு விகிதத்தில் ஏற்பட்ட சிறிய வீழ்ச்சியே; 1960ம் ஆண்டில் 9.6 சதவீதமாக இருந்த இவ்வதிகரிப்பு, 1961ல் 3,1 சதவீதத்தால் அதிகரித்தது. நெல் உற்பத்தி அதிகரிப்பு வீதத்திலுள்ள வேற்றுமைகளே இதற்குப் பெருமளவு காரணமாயிருந்தது. குடிசனமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் மதிப்பிடப்பட்ட (விதை நெல்லை நீக்கிய) நெல் உற்பத்தி, பயிர் வெட்டும் மாதிரி யளவைகளின் அடிப்படையில், 1959ம் ஆண்டிலும் பார்க்க 1960ம் ஆண்டில் 78 இலட்சம் புசல்களால் அதிகரித்ததெனினும், 1960ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 1961ல் அது 1 இலட்சம் புசல்களால் அதிகரித்ததென்று தற்காலிகமாக மதிப்பி டப்பட்டுள்ளது. உள்நாட்டு உபயோகத்திற்கான உற்பத்திபற்றிய இரண்டாவது குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில், அரசாங்கத் துறையினால் மேற்கொள்ளப் பட்ட மூலதன அபிவிருத்தியில் உபயோகத்திற்கான பொருட்கள், சேவைகளின் நிகர உற்பத்தி, 1960ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 1961ல் 33.3 சதவீதத் தால் அதிகரித்தது; 1960ல் இவ்வுற்பத்தி 8.2 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. ஏற்றுமதிக்கான உற்பத்தியும், உள்நாட்டு உபயோகத்திற்கான உற்பத்தியும் ஒருங்கே நோக்கும்பொழுது, 1960ல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அதிக ரிப்பு 4.9 சதவீதமாயும், 1961ல் இவ்வுற்பத்தி அதிகரிப்பு 2.3 சதவீதமாயும் இருந்தன. மொத்த உள்நாட்டு உற்பத்தி வெளிநாட்டிலிருந்து வரும் நிகரச் சிறை வருமானங்களுக்குத் திருத்தியமைக்கப்பட்டபின் மொத்தத் தேசிய உற்பத்தியா கும். இத்தேசிய உற்பத்தி அதிகரிப்புகள் 1961ம் ஆண்டிலும், 1960ம் ஆண்டி லும் முறையே 2.4 சதவீதமாகவும், 4.8 சதவீதமாகவும் இருந்தன.

அட்டவணை II—3ல் நடைமுறைச் சந்தை விலைகளின்படி மொத்தச் செலவு சம்பந்தமான நேர்முக மதிப்பீடுகள் முதன்முறையாக இவ்வறிக்கையில் விரிவா கத் தரப்பட்டுள்ளன. மொத்தத் தேசிய செலவின் பாகுபாடுகளிலிருந்து தோன் றுவது என்னவென்றால், 1959ம் ஆண்டிலும் பார்க்க 1960ல் 5.9 சதவீதத் தால் அதிகரித்த தனிப்பட்டோர் நுகர்ச்சி, 1961ல் 1.8 சதவீதத்தால் வீழ்ச்சி யுற்றது. 1959ம் ஆண்டிலும் பார்க்க 1960ல் 2.5 சதவீதத்தால் அதிகரித்த அரசாங்க நுகர்ச்சி, 1961ல் 0.8 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. 1960ம் ஆண் டில் 7.9 சதவீதத்தால் வீழ்ச்சியுற்ற தனிப்பட்டோர் துறையின் மொத்த நிலை யான மூலதன ஆக்கம் (அரசாங்கக் கூட்டுத் தாபனங்களையும் சேர்த்து விளக்கப் பட்டுள்ளது.) 1961ல் 1.1 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. இம்மாற்ற அமைப் புக்கெதிராக, 1960ல் 2.1 சதவீதத்தால் வீழ்ச்சியுற்ற (அரசாங்க கூட்டுத் தாப னங்களை விலக்கி விளக்கப்பட்டுள்ள) அரசாங்கத் துறையின் மொத்த நிலையான மூலதன ஆக்கம் 1961ல் ஏறக்குறைய 20.3 சத வீதத்தால் அதிகரித்தது. ஆயி னும் கையிருப்புகளில் ஏற்பட்ட மாற்றங்களையும் சேர்த்துக் கணிக்கும்பொழுது தனிப்பட்டோர் துறையின் மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் 1960ல் 14.1 சத வீதத்தால் வீழ்ச்சியுற்றதெனினும், 1961ம் ஆண்டில் அது 5.9 சதவீதத் தால் அதிகரித்தது. 1960ம் ஆண்டில் 10.5 சதவீதத்தால் உயர்ந்த அரசாங்கத் துறையின் மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் 1961ம் ஆண்டில் 2.8 சத வீதத்தால் அதிகரித்தது.

## அட்டவணை II–3

## நடைமுறைச் சந்தை விலைகளின்படி மொத்தத் தேசிய செலவு

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1959 | 1960 | 1961 | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|
| | | | | 1959ல் இருந்து 1960ம் ஆண்டு | 1960ல் இருந்து 1961ம் ஆண்டு |
| **I. தனிப்பட்டோர் நுகர்ச்சி** | | | | | |
| (அ) பொருட்களினதும், சினைக்கொள் அல்லாத சேவைகளினதும் இறக்குமதிகள் | | | | | |
| (i) உணவும், ஏனைய சொந்த நுகர்ச்சிப் பொருட்களினதும் இறக்குமதிகள் (1) .. | 1,774 | 1,831 | 1,615 | + 3·2 | — 11·8 |
| (ii) சினைக்கொள் அல்லாத சேவைகளின் இறக்குமதிகள் .. .. | 178 | 152 | 140 | —14·5 | — 7·8 |
| மொத்தம் .. .. | 1,952 | 1,982 | 1,755 | + 1·6 | — 11·5 |
| (ஆ) உள்நாட்டில் உற்பத்திசெய்யப்பட்ட பொருட்களும் சேவைகளும் | | | | | |
| (i) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் .. .. | 1,863 | 2,033 | 2,128 | + 9·1 | + 4·7 |
| (ii) குடியிருப்புக்களின் வாடகை .. | 160 | 172 | 187 | + 7·5 | + 8·4 |
| (iii) உள்நாட்டுப் பிரயாணம் .. .. | 187 | 198 | 207 | + 6·3 | + 4·1 |
| (iv) சேவைகள் (முன்பு சேர்க்கப்படாதவைகள்) | 482 | 492 | 503 | + 2·1 | + 2·2 |
| மொத்தம் .. .. | 2,691 | 2,895 | 3,023 | + 7·6 | + 4·4 |
| (இ) இலங்கையில் வாசம் செய்யாதோர் கொள்வனவு செய்த பொருட்களையும், சேவைகளையும் தவிர .. | —195 | —169 | —153 | —13·5 | — 9·1 |
| **மொத்த தனிப்பட்டோர் நுகர்ச்சி** .. .. | 4,448 | 4,709 | 4,625 | + 5·9 | — 1·8 |
| **II. அரசாங்க நுகர்ச்சி** | | | | | |
| (i) பொருட்களிலும், சேவைகளிலும் நடைமுறைச் செலவு—மத்திய அரசாங்கம் .. | 940 | 968 | 956 | + 3·0 | — 1·2 |
| (ii) பொருட்களிலும், சேவைகளிலும் நடைமுறைச் செலவு—உள்ளூராட்சி .. | 90 | 87 | 90 | — 3·4 | + 3·8 |
| (iii) அரசாங்கக் கட்டடங்களின் கணிக்கப்பட்ட வாடகைகள் .. .. | 20 | 21 | 21 | + 5·0 | ... |
| **மொத்தம்** .. .. | 1,050 | 1,076 | 1,067 | + 2·5 | — 0·8 |
| **III. உள்நாட்டு தனிப்பட்டோர் மூலதன ஆக்கம்** | | | | | |
| (i) நிலையான மொத்த மூலதன ஆக்கம் .. | 657 | 605 | 598 | — 7·9 | — 1·1 |
| (ii) கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றம் (2) .. | + 15 | — 27 | + 13 | | |
| **மொத்தம்** .. .. | 672 | 577 | 611 | —14·1 | + 5·9 |
| **IV. உள்நாட்டு அரசாங்க மூலதன ஆக்கம்** | | | | | |
| (i) நிலையான மொத்த மூலதன ஆக்கம் .. | 394 | 386 | 464 | — 2·1 | + 20·3 |
| (ii) கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றம் (3) .. | — 15 | + 33 | — 33 | | |
| **மொத்தம்** .. .. | 380 | 420 | 431 | +10·5 | + 2·8 |
| **V. வெளிநாட்டிலுள்ள நிகர முதலீடு (4)** .. .. | —208 | —221 | — 75 | — 6·0 | — 65·8 |
| **VI. சர்வதேச நன்கொடைகளினதும், மாற்றங்களினதும் நிகர வரவுகள் (நீக்கி)** .. .. | + 12 | — 22 | — 21 | | |
| **VII. மொத்தத் தேசியச் செலவு** .. .. | 6,353 | 6,540 | 6,638 | + 2.9 | + 1·5 |

மூலங்கள்: அட்டவணை II—2ல் உள்ள பொதுக்குறிப்புக்களைப் பார்க்கவும்

(1) சில்லறை விலைகளில்.

(2) தேயிலை, இரப்பர், கால்நடை ஆகியவற்றின் கையிருப்புக்களில் மட்டும் ஏற்பட்ட மாற்றம்.

(3) உத்தரவாத விலைத்திட்ட நெற் கையிருப்புக்களில் மட்டும் ஏற்பட்ட மாற்றம்.

(4) வெளிநாட்டிலுள்ள நிகர முதலீடுகள், நடைமுறைக் கணக்கில் தேசத்தின் மிகையாகும்.

வெவ்வேறாகக் கணிக்கப்பட்ட தேசிய உற்பத்தியினதும், தேசியச் செலவினதும் மதிப்பீடுகள் அட்டவணை II—4ல் சமப்படுத்திக் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை II—4

நடைமுறை விலைகளின்படி மொத்தத் தேசிய உற்பத்தியின்பேரில் ஏற்பட்ட செலவு

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1959 | 1960 | 1961 | | 1959 | 1960 | 1961 |
|---|---|---|---|---|---|---|---|
| 1. சினைக்கொள் விலைகளின்படி மொத்தத் தேசிய உற்பத்தி .. | 5844 | 6127 | 6274 | 4. நுகர்ச்சிச் செலவு: தனிப்பட்டோர் .. .. | 4448 | 4709 | 4625 |
| | | | | 5. நுகர்ச்சிச் செலவு: அரசாங்கம் | 1050 | 1076 | 1067 |
| 2. மானியங்களைத் தவிர்த்த மறைமுக வரிகள் .. | 397 | 407 | 384 | 6. மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம்: தனிப்பட்டோர் .. | 672 | 577 | 611 |
| | | | | 7. மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம்: அரசாங்கம் .. | 380 | 420 | 431 |
| | | | | 8. நுகர்ச்சிச் செலவும், மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கச் செலவும் .. .. | 6549 | 6782 | 6735 |
| | | | | 9. பொருட்களினதும், சினைக்கொள் அல்லாத சேவைகளினதும் ஏற்றுமதிகள் .. | 2016 | 2011 | 1913 |
| | | | | 10. பொருட்களினதும், சினைக்கொள் அல்லாத சேவைகளினதும் இறக்குமதிகள் (நீக்கி) .. | –2176 | –2209 | –1969 |
| | | | | 11. சந்தை விலைகளின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தியின் செலவு .. .. | 6389 | 6584 | 6679 |
| | | | | 12. வெளிநாட்டிலிருந்து சினை வருமானம் (நிகர) .. | – 37 | – 44 | – 40 |
| | | | | 13. எஞ்சியவை (கையிருப்புக்களின் மறைமுக மாற்றங்களும், புள்ளி விபரத் தவறுகளும்) .. | –112 | – 6 | + 20 |
| **3. சந்தை விலைகளின்படி மொத்தத் தேசிய உற்பத்தி ..** | **6241** | **6534** | **6658** | **14. சந்தை விலைகளின்படி மொத்தத் தேசிய உற்பத்தியின் செலவு ..** | **6241** | **6534** | **6658** |

மூலம்: இலங்கை மகா வங்கி

குறிப்பு: இவ் அட்டவணையிலுள்ள 11ம், 12ம், விடயங்களினது அட்சரகணிதத் தொகை, மொத்தத் தேசிய உற்பத்திக்கு (அட்டவணை II—3 விடயம் VII) சமமாகும். இது இவ் அட்டவணையின் 14ம் விடயத்தில்—(சந்தை விலைகளின்படி மொத்தத் தேசிய உற்பத்திச் செலவு) இருந்து, விடயம் 13ல் (கையிருப்புக்களின் மறைமுக மாற்றங்களும், புள்ளி விபரத் தவறுகளும்) காட்டப்பட்டுள்ள தொகையால் மட்டுமே வேறுபடுகின்றது.

இவ்வட்டவணையில் 11ம், 12ம் விடயங்களில் கூட்டுத் தொகை (மொத்த தேசிய செலவு சந்தை விலைகளின்படி மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான செலவும், வெளிநாட்டிலிருந்து வரும் நிகரச் சினை வருமானமும்) அட்டவணை II—3ன் விடயம் VIIஉடன் (மொத்தத் தேசியச் செலவு) ஒப்பியல்பாகின்றது. கையிருப்புகளில் ஏற்பட்ட சகல மாற்றங்களையும் முழுமையாகச் சேர்த்துக் கணித்து புள்ளி விபரத் தவறுகளும் இல்லாதிருந்தால், இவ்விடயம் ''செலவு முறையாக'' சந்தை விலைகளில் கணிக்கப்பட்ட மொத்தத் தேசிய உற்பத்தியுடன் (அட்டவணை II—4ன் விடயம் 14) சமமாக இருக்கும் என்றபோதிலும்,

உண்மையில் விடயம் 14ல் இருந்து ''மிகை'' (விடயம் 13) எனக் காட்டப்பட்டுள்ள தொகையால் வேறுபடுகின்றது. உண்மை உற்பத்தியும், உண்மை வருமானமும், உண்மைச் செலவும் நிலையான 1956ம், 1959ம் ஆண்டு விலைகளின் நியதிப்படி, உண்மையான தேசிய உற்பத்தியின் விரிவான மதிப்பீடுகள் அட்டவணை II—5ல் காட்டப்பட்டுள்ளன. 1960ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 1961ல் நடைமுறைப் பெறுமானத்தில் ஏற்றுமதிக்கான உற்பத்தியின் நிகர விளைவு வீழ்ச்சியுற்றபோதிலும், உண்மை நியதியின்படி 1961ல் ஏற்றுமதித் துறையின் உற்பத்தி நியாயமான அளவு அதிகரித்துள்ளது. நிலையான 1956ம் ஆண்டு விலைகளின்படி ஏற்றுமதிக்கான உற்பத்தியின் நிகர விளைவு 1960ம் ஆண்டிலும் பார்க்க 1961ல் 6.4 சத வீதத்தாலும் உயர்ந்தது. அதே நேரத்தில், 1959ம் ஆண்டிற் பார்க்க 1960ல் ஏற்பட்ட அதிகரிப்புகள் முறையே 3.9 சதவீதமாகவும், 3.1 சதவீதமாகவும் காணப்பட்டன. ஆயினும், பெருமளவில் தேங்காய் உற்பத்தியில் ஏற்பட்ட அசாதாரணமான உயற்சியின் பயனுக, 1961ம் ஆண்டுக்கான உண்மை உற்பத்தியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டபோதிலும், நிலையான விலைகளின் நியதிப்படி உண்மையான ஏற்றுமதிப் பெறுமானங்கள் 1959ல் இருந்து 1960 வரையுள்ள காலத்திலும் பார்க்க, 1960ல் இருந்து 1961ம் ஆண்டு வரையுள்ள காலத்தில் ஒரு சிறிய அதிகரிப்பைக் காட்டியது. நிலையான 1956ம் ஆண்டு விலைகளின்படி உள்நாட்டு ஏற்றுமதிகளின் பெறுமானம் 1960ம் ஆண்டிற் பார்க்க 1961ல் 3.3 சத வீதத்தாலும், நிலையான 1959ம் ஆண்டு விலைகளின்படி 4.7 சத வீதத்தாலும் உயர்ந்தது. அதே நேரத்தில் 1959ல் இருந்து 1960ல் இப்பெறுமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்புகள் முறையே 5.8 சதவீதமாகவும் 5.1 சதவீதமாகவும் காணப்பட்டன. உண்மையான உற்பத்தியினதும், உண்மையான ஏற்றுமதிகளினதும் சமநிலையற்ற நடமாட்டங்கள், கையிருப்புகளில் ஏற்பட்ட மாற்றங்களினுல் விளக்கப்பட்டுள்ளன. 1960ம் ஆண்டில் தேயிலையினதும், இன்னும் குறிப்பாக இரப்பரினதும் உற்பத்தியைவிட ஏற்றுமதிகளே மிகையாக இருந்தன. மறுபக்கத்தில், 1960ல் இரப்பரின் ஏற்றுமதிகளைவிட உற்பத்தியே மிகையாக இருந்ததெனினும், தேயிலையின் கையிருப்புகள் எவ்வித மாற்றமுமின்றி நிலையாயிருந்தன.

உள்நாட்டு உபயோகத்திற்கான உற்பத்தியில் 1960ம் ஆண்டு ஏற்பட்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில், 1961ல் விவசாயம், வனவியல், கால்நடை, மீன் பிடித்தல் ஆகியவற்றை அடக்கிய தொகுதியில் நடைமுறை விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் சிறியதன்மைப்பற்றி முன்பு குறிப்பிடப்பட்டுள்ளது. நிலையான விலைகளில் மதிப்பிடுவதினுல், நடைமுறை விலைகளில் ஒப்பீடுகள் செய்யும்பொழுது எழுந்த முடிவுகளை உறுதிப்படுத்துகின்றன. குறிப்புகளுக்கேதுவாக வேருெரு அம்சம் என்னவெனில், 1961ம் ஆண்டிலும், 1960ம் ஆண்டிலும் கட்டட ஆக்கக் கைத்தொழில்களையும், ஏற்றுமதிப் பொருட்களைப் பதனீடு செய்வதில் ஈடுபட்டிருக்கும் கைத்தொழில்களையும் தவிர்த்த [அட்டவணை II—5ன் விடயம் II (ii)] உண்மையான நிகரக் கைத்தொழில் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியே. (1)

தேசிய வருமானத்தில், வர்த்தக மாற்று விகிதங்களில் ஏற்பட்ட மாற்றங்களின் விளைவுகள் அட்டவணை II—6ல் பாகுபடுத்தப்பட்டுள்ளன. மொத்த தேசிய உற்பத்தியின் நிலையான விலைகளின்படி 1960ம் ஆண்டிற் பார்க்க 1961ல் ஏறக்குறைய 4 சதவீத, கணிசமான அதிகரிப்பு ஏற்பட்டபொழுதிலும், உண்மையான தேசிய வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு சிறியதாகவே காணப்பட்டது. வர்த்தக மாற்றுவிகிதத்தில் ஏற்பட்ட பிரதிகூலமான நடமாட்டமே இதற்குக்காரண

---

(1) இவ்வீழ்ச்சி, ஒன்றில் குறிப்பிடப்பட்ட கைத்தொழில்களில் உண்மையான அபிவிருத்தியைக் குறிக்கின்றதோ, அல்லது, கைத்தொழில் உற்பத்தி பற்றிய கிடைக்கக்கூடிய புள்ளி விபரங்களின் வரையறைகளைத்தான் குறிக்கின்றதோ என்று உறுதிப்படுத்த முடியவில்லை.

மாகும். அதாவது ஒரு குறிப்பிட்ட அளவு இறக்குமதிகளுக்கு வேண்டிய ஏற்றுமதிகளின் அளவு அதிகரித்திருப்பதே இதன் கருத்தாகும். வர்த்தக மாற்று விகிதத்தில் ஏற்பட்ட இச்சீர்கேடான நிலைக்கு இடம்விட்டு நோக்கும்பொழுது, உண்மையான சாதனங்களைக்கொள்ளும் ஆற்றலின்படி இலங்கையின் உண்மைத் தேசிய வருமானம், 1961ம் ஆண்டில் நிலையான 1956ம் ஆண்டு விலைகளில் மதிப்பிடப் பட்டுள்ளபடி 1.3 சதவீதத்தாலும், நிலையான 1959ம் ஆண்டு விலைகளில் மதிப் பிடப்பட்டுள்ளபடி 1.6 சதவீதத்தாலும் அதிகரித்தது. 1959ம் ஆண்டிற்கும், 1960ம் ஆண்டிற்கும் இடையே வர்த்தக மாற்று விகிதம் சிறிது சீர்கேடான

**அட்டவணை II–5**

**நடைமுறைச் சிவணக்கொள்விலைகளின்படி மொத்தத் தேசிய உற்பத்தி**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | நிலையான 1956ம் ஆண்டு விலைகளில் | | | | | நிலையான 1959ம் ஆண்டு விலைகளில் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | சதவீதமாற்றம் | | | | | சதவீத மாற்றம் | |
| | 1959 | 1960 | 1961 | 1959ல் இருந்து 1960ம் ஆண்டு | 1960ல் இருந்து 1961ம் ஆண்டு | 1959 | 1960 | 1961 | 1959ல் இருந்து 1960ம் ஆண்டு | 1960ல் இருந்து 1961ம் ஆண்டு |
| **I. ஏற்றுமதிக்கான உற்பத்தி** | | | | | | | | | | |
| (i) உள்நாட்டு ஏற்றுமதிகள்: | | | | | | | | | | |
| ஏற்றுமதி விலைப் பெறுமானம் .. | 1,729 | 1,830 | 1,890 | + 5·8 | + 3·3 | 1,692 | 1,778 | 1,862 | + 5·1 | + 4·7 |
| கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றத்தின் பெறுமானம் .. | + 1 | — 36 | + 21 | | | ... | — 34 | + 21 | | |
| இறக்குமதி செய்து உபயோகித்த பொருட்கள் (நீக்கி) .. | — 89 | — 89 | — 98 | — | + 9·9 | — 82 | — 83 | — 92 | + 1·3 | +10·3 |
| நிகர உற்பத்தி .. | 1,640 | 1,704 | 1,814 | + 3·9 | + 6·4 | 1,610 | 1,660 | 1,791 | + 3·1 | + 7·8 |
| (ii) திருப்பி ஏற்றுமதி செய்யப்பட்டவைகள்: கூட்டப்பட்ட பெறுமானம் .. | 3 | 2 | 2 | —19·2 | ... | 3 | 2 | 2 | —16·0 | ... |
| **ஏற்றுமதிக்கான மொத்த உற்பத்தி: நிகர உற்பத்தி** .. | **1,643** | **1,707** | **1,816** | **+ 3·9** | **+ 6·4** | **1,613** | **1,663** | **1,793** | **+ 3·1** | **+ 7·8** |
| **II. உள்நாட்டுப் பாவனைக்கான உற்பத்தி (நிகர உற்பத்தி)** | | | | | | | | | | |
| (i) விவசாயமும், வனவியலும், கால்நடையும், மீன்பிடித்தலும் .. | 1,108 | 1,237 | 1,270 | +11·6 | + 2·7 | 1,211 | 1,351 | 1,388 | +11·6 | + 2·7 |
| (ii) கைத்தொழில் (முன்பு சேர்க்கப்படாதவைகள்) | 255 | 233 | 225 | — 8·5 | — 3·6 | 321 | 305 | 299 | — 5·2 | — 2·0 |
| (iii) மூலதன அபிவிருத்தி, பொருட்களும் சேவைகளும்) | | | | | | | | | | |
| (அ) அரசாங்கத்துறை .. | 281 | 259 | 344 | — 8·0 | +33·1 | 342 | 314 | 418 | — 8.3 | +33·2 |
| (ஆ) தனிப்பட்டோர்துறை | 206 | 228 | 207 | + 1·0 | — 9·4 | 246 | 274 | 254 | + 1·4 | — 7·3 |
| (iv) குடியிருப்புக்களின் உடமை | 137 | 149 | 160 | + 9·0 | + 7·2 | 144 | 157 | 167 | + 9·1 | + 6·5 |
| (v) உத்தியோகச் சேவைகள், சொந்தச் சேவைகள், வீட்டுச் சேவைகள் .. | 420 | 431 | 434 | + 2·5 | + 0·7 | 437 | 448 | 451 | + 2·6 | + 0·7 |
| (vi) வர்த்தகம் (அரசாங்கமல்லாதவையும், ஏற்றுமதிக்கு அல்லாதவையும்) .. | 478 | 506 | 465 | + 5·9 | — 8·2 | 502 | 532 | 488 | + 5·9 | — 8·2 |
| (vii) போக்குவரத்து (அரசாங்கமல்லாதவையும், ஏற்றுமதிக்கு அல்லாதவையும்) | 308 | 328 | 324 | + 6·5 | — 1·0 | 307 | 327 | 323 | + 6·5 | — 1·0 |
| (viii) அரசாங்கம், (முன்பு சேர்க்கப்படாதவைகள்) .. | 759 | 816 | 856 | + 7·6 | + 4·9 | 759 | 816 | 856 | + 7·6 | + 4·9 |
| **மொத்தம்** .. | 3,951 | 4,188 | 4,285 | + 5·9 | + 2·3 | 4,268 | 4,523 | 4,644 | + 6·0 | + 2·7 |
| **III. மொத்த உள்நாட்டு உற்பத்தி** .. | 5,594 | 5,894 | 6,101 | + 5·4 | + 3·5 | 5,881 | 6,185 | 6,437 | + 5·2 | + 4·1 |
| **IV. வெளிநாட்டிலிருந்து வந்த நிகர சினை வருமானம்** .. | — 37 | — 44 | — 41 | | | — 37 | — 44 | — 41 | | |
| **V. மொர்த்தத் தேசிய உற்பத்தி** .. | 5,557 | 5,850 | 6,060 | + 5·3 | + 3·6 | 5844 | 6,141 | 6,396 | + 5·1 | + 4·2 |

மூலம்: இலங்கை மகா வங்கி

நிலையை அடைந்ததெனினும், 1960ம் ஆண்டில் உண்மையான வருமானம் கணிசமான அளவால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பு நிலையான 1956ம், 1959ம் ஆண்டுக்கான இரு விலைகளின் நியதிப்படியும் 4.8 சதவீதமாகும்.

அட்டவணை II—6 மொத்த வர்த்தக மாற்று விகிதத்தால் ஏற்படும் பயனை ஒவ்வொரு பிரதான ஏற்றுமதிப் பொருட்களின் (தேயிலை, இரப்பர், தெங்கு உற்பத்திப் பொருட்கள், ஏனைய உற்பத்திகள்) கூறுகளின்படி (1) பாகுபடுத்தி அடக்கியுள்ளது.

அட்டவணை II—6

உண்மையான தேசிய வருமானத்தில் வர்த்தக மாற்றுவிகிதம் உதவிய பங்கு

பத்து இலட்சம் ரூபாய்களில்

| ஆண்டு | உண்மையான தேசிய உற்பத்தி* | ஏற்றுமதிகளால் ஏற்படும் வர்த்தக மாற்று விகிதப் பயன் | | | | | உண்மையான தேசிய வருமானம்* |
|---|---|---|---|---|---|---|---|
| | | தேயிலை | இரப்பர் | தெங்கு உற்பத்திப் பொருட்கள் | ஏனைய உற்பத்திப் பொருட்கள் | சகல உற்பத்திப் பொருட்கள் | |
| | 1956ம் ஆண்டுச் சில்லறைக்கொள் விலைகளில் | | | | | | |
| 1959 .. .. | 5,557 | – 101 | – 11 | + 85 | – 3 | – 29 | 5,528 |
| 1960 .. .. | 5,850 | – 136 | + 27 | + 48 | + 3 | – 58 | 5,792 |
| 1961 .. .. | 6,060 | – 152 | – 35 | – 4 | – 2 | – 193 | 5,867 |
| | 1959ம் ஆண்டுச் சில்லறைக்கொள் விலைகளில் | | | | | | |
| 1959 .. .. | 5,844 | – | – | – | – | – | 5,844 |
| 1960 .. .. | 6,141 | – 26 | + 39 | – 33 | + 6 | – 14 | 6,127 |
| 1961 .. .. | 6,396 | – 38 | – 25 | – 111 | + 1 | – 173 | 6,224 |

மூலம்: இலங்கை மகா வங்கி

* உண்மையான தேசிய உற்பத்தியினதும், உண்மையான தேசிய வருமானத்தினதும் தொகைகள் தேய்மானத்தைக் கழித்த மொத்தங்களாகும்.

தனிப்பட்டோரினதும், அரசாங்கத்தினதும் நுகர்ச்சி, தனிப்பட்டோரினதும், அரசாங்கத்தினதும் உள்நாட்டு மூலதன ஆக்கம் முதலியனவற்றின் விரிவாக்கப்பட்ட மதிப்பீடுகள் அட்டவணை II—7ல் கொடுக்கப்பட்டுள்ளன. தனிப்பட்டோர் நுகர்ச்சியில் இறக்குமதிகளின் பங்கில் ஏற்பட்ட வீழ்ச்சி அவ்வட்டவணையின் விடயம் 1, அ–ல் இருந்து தெளிவாகின்றது. அதில் காட்டப்பட்டுள்ளபடி சில்லறை விலைகளில் உணவினதும், சில்லறைக்கொள் அல்லாத சேவைகளினதும் இறக்குமதிகள் 1961ல் ஏறக்குறைய 10 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றன. 1960ல் இது 1 சதவீதத்திற்கு மேலாக உயர்ந்திருந்தது. உண்மை நியதியின்படி, 1961ம் ஆண்டு மொத்தத் தனிப்பட்டோர் நுகர்ச்சி 1 சதவீதத்திற்குச் சிறிது குறைவாகவே வீழ்ச்சியுற்றது. இதற்கெதிராக 1960ல் உண்மையான தனிப்பட்டோர் நுகர்ச்சி $5\frac{1}{2}$ சதவீதத்திற்கு அதிகமாக உயர்ந்திருந்தது. 1960ம் ஆண்டு $2\frac{1}{2}$ சதவீதத்தால் அதிகரித்த அரசாங்க நுகர்ச்சியின் உண்மைப் பெறுமானம், 1961ம் ஆண்டில் ஏறக்குறைய 1 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. மறுபக்கத்தில் தனிப்பட்டோர் துறையின் (அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் உட்பட) மொத்த மூலதன ஆக்கம் 1961ம் ஆண்டில், நிலையான 1956ம் ஆண்டு விலைகளில் 6.8 சத வீதத்தாலும், நிலையான 1959ம் ஆண்டு விலைகளில் 5.9 சதவீதத்தாலும் அதிகரித்தது. இதற்கெதிராக 1960ல் முறையே 15.0 சதவீதத்தாலும், 13.4 சதவீதத்தாலும் வீழ்ச்சியுற்றிருந்தது. ஆனால் இவ்விரண்டு ஆண்டுகளுக்கிடையேயுள்ள சாதகமான மாற்

(1) குறித்த சில ஏற்றுமதிகளின் நடைமுறைப் பெறுமானத்திற்குச் சமமான நடைமுறைப் பெறுமான இறக்குமதிகளின் நிலையான விலைப் பெறுமானத்துடன், இக்குறித்த சில வகை ஏற்றுமதிகளின் நிலையான விலைப் பெறுமானத்தை ஒப்பிட்டு, அதன் அடிப்படையில் இது செய்யப்பட்டுள்ளது.

அட்டவணை II—7

நடைமுறைச் சந்தை விலைகளின்படி நுகர்ச்சிச் செலவும் மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கச் செலவும்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | நிலையான 1956ம் ஆண்டு விலைகளில் | | | சதவீத மாற்றம் | | நிலையான 1959ம் ஆண்டு விலைகளில் | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1959 | 1960 | 1961 | 1959ல் இருந்து 1960ம் ஆண்டு | 1960ல் இருந்து 1961ம் ஆண்டு | 1959 | 1960 | 1961 | 1959ல் இருந்து 1960ம் ஆண்டு | 1960ல் இருந்து 1961ம் ஆண்டு |
| **I. தனிப்பட்டோர் நுகர்ச்சி** | | | | | | | | | | |
| (அ) பொருட்களினதும், சினைக்கொள் அல்லாத சேவைகளினதும் இறக்குமதிகள் | | | | | | | | | | |
| (i) உணவும், ஏனைய சொந்த நுகர்ச்சிப் பொருட்களினதும் இறக்குமதிகள்* .. .. | 1,817 | 1,871 | 1,671 | + 3·0 | — 8·1 | 1,774 | 1,825 | 1,649 | + 2·9 | — 9·7 |
| (ii) சினைக்கொள் அல்லாத சேவைகளின் இறக்குமதிகள் | 178 | 152 | 141 | —15·0 | — 6·8 | 178 | 151 | 141 | —15·0 | — 6·8 |
| மொத்தம் .. .. | 1,995 | 2,022 | 1,812 | + 1·4 | —10·4 | 1,952 | 1,976 | 1,790 | + 1·3 | — 9·4 |
| (ஆ) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களும் சேவைகளும் | | | | | | | | | | |
| (i) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் | 1,840 | 2,010 | 2,138 | + 9·3 | + 6·4 | 1,863 | 2,024 | 2,135 | + 8·7 | + 5·5 |
| (ii) குடியிருப்புக்களின் வாடகை .. .. | 153 | 167 | 179 | + 9·2 | + 7·0 | 160 | 175 | 187 | + 9·3 | + 7·0 |
| (iii) உள்நாட்டுப் பிரயாணம் .. .. | 187 | 196 | 203 | + 4·8 | + 3·5 | 187 | 196 | 203 | + 4·8 | + 3·5 |
| (iv) சேவைகள் (முன்பு சேர்க்கப்படாதவைகள்) .. | 461 | 478 | 483 | + 3·6 | + 1·1 | 482 | 499 | 504 | + 3·6 | + 1·1 |
| மொத்தம் .. .. | 2,641 | 2,851 | 3,003 | + 7·9 | + 5·3 | 2,691 | 2,894 | 3,030 | + 7·5 | + 4·7 |
| (இ) இலங்கையில் வாசம் செய்யாதோர் கொள்வனவு செய்த பொருட்களையும் சேவைகளையும் தவிர்த்து .. | — 186 | — 163 | — 147 | —12·1 | —10·2 | — 195 | — 171 | — 154 | —12·1 | —10·3 |
| **மொத்த தனிப்பட்டோர் நுகர்ச்சி** .. .. | **4,451** | **4,710** | **4,668** | + 5·8 | — 0·9 | **4,448** | **4,699** | **4,666** | + 5·6 | — 0·7 |
| **II. அரசாங்க நுகர்ச்சி** | | | | | | | | | | |
| (i) பொருட்களிலும், சேவைகளிலும் நடைமுறைச் செலவு—மத்திய அரசாங்கம் .. .. (ii) பொருட்களிலும், சேவைகளிலும் நடைமுறைச் செலவு—உள்ளூராட்சி .. .. | 1,016 | 1,043 | 1,032 | + 2·7 | — 1·0 | 1,030 | 1,054 | 1,042 | + 2·4 | — 1·1 |
| (iii) அரசாங்கக் கட்டடங்களின் கணிக்கப்பட்ட வாடகை | 20 | 21 | 21 | + 5·0 | + 0·5 | 20 | 21 | 21 | + 5·0 | + 0·5 |
| **மொத்தம்** .. .. | **1,036** | **1,063** | **1,053** | + 2·7 | — 1·0 | **1,050** | **1,075** | **1,063** | + 2.4 | — 1·1 |
| **III. உள்நாட்டுத் தனிப்பட்டோர் மூலதன ஆக்கம்** | | | | | | | | | | |
| (i) நிலையான மொத்த மூலதன ஆக்கம் .. | 576 | 532 | 520 | — 7·6 | — 2·3 | 657 | 609 | 601 | — 7·3 | — 1·4 |
| (ii) கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றம் .. | + 15 | — 30 | + 17 | | | + 15 | — 27 | + 15 | | |
| **மொத்தம்** .. .. | **591** | **502** | **537** | —15·0 | + 6·8 | **672** | **582** | **616** | —13.4 | + 5·9 |
| **IV. உள்நாட்டு அரசாங்க மூலதன ஆக்கம்** | | | | | | | | | | |
| (i) நிலையான மொத்த மூலதன ஆக்கம் .. | 326 | 316 | 384 | — 3·2 | +21·5 | 394 | 380 | 465 | — 3·6 | +22·3 |
| (ii) உத்தரவாத விலைத் திட்ட நெற் கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றம் .. .. | — 15 | + 33 | — 33 | | | — 15 | + 33 | — 33 | | |
| **மொத்தம்** .. .. | **312** | **349** | **351** | +12·1 | + 0·4 | **380** | **413** | **432** | + 8·9 | + 4·4 |
| **நுகர்ச்சிச் செலவும் மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கச் செலவும்** .. | **6,389** | **6,625** | **66,09** | + 3·7 | — 0·3 | **6,549** | **6,769** | **6,776** | + 3·4 | + 0·1 |

*சில்லறைப் பெறுமானங்களில்

மூலம்: இலங்கை மகா வங்கி

றங்கள் பெருமளவில் கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்களினாலேயே ஏற்பட்டன. ஏனெனில் 1960ல் ஒப்பியல்வாகும் கையிருப்புக்களின் பெறுமானம் வீழ்ச்சியுற்றிருந்ததெனினும், 1961ல் இது அதிகரித்தது. கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்கள் நீக்கப்பட்ட பின்னர், தனிப்பட்டோர் துறையின் மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் 1961ம் ஆண்டில், நிலையான 1956ம் ஆண்டு விலைகளில் 2.3 சதவீதத்தாலும், நிலையான 1959ம் ஆண்டு விலைகளில் 1.4 சதவீதத்தாலும் உண்மையில் வீழ்ச்சியுற்றது. 1960ம் ஆண்டில் இவ் வீழ்ச்சிகள் முறையே 7.6 சதவீதமாகவும், 7.3 சதவீதமாகவும் காணப்பட்டன. 1960ம் ஆண்டிலும், 1961ம் ஆண்டிலும் அரசாங்கத்துறையின் மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் உயர்ந்துகொண்டே சென்றதெனினும், 1961ல் ஏற்பட்ட அதிகரிப்பு 1960ல் ஏற்பட்ட அதிகரிப்பிலும் பார்க்கச் சிறியதாகவே காணப்பட்டது. ஆயினும், அரசாங்க உள்நாட்டு மூலதன ஆக்கத்தின் ஒப்பீடுகள், 1960ல் அதிகரித்து, 1961ல் வீழ்ச்சியடைந்த உத்தரவாத விலைத்திட்ட நெற் கையிருப்புகளில் ஏற்பட்ட மாற்றங்களையும் கணிப்பில் சேர்க்கின்றன. இக்கையிருப்பில் ஏற்பட்ட மாற்றங்களைத் தவிர்த்த, அரசாங்கத்துறையின் மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம், 1961ம் ஆண்டில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் காட்டியது. இவ்வதிகரிப்பு நிலையான 1956ம் ஆண்டு விலைகளில் 21.5 சதவீதமாகவும், நிலையான 1959ம் ஆண்டு விலைகளில் 22.3 சதவீதமாகவும் காணப்பட்டது. 1960ம் ஆண்டில், நிலையான 1956ம் ஆண்டு விலைகளில் 3.2 சதவீதத்தாலும், நிலையான 1959ம் ஆண்டு விலைகளில் 3.6 சதவீதத்தாலும் ஏற்பட்ட வீழ்ச்சிகளுடன் இவ்வதிகரிப்புகள் வேறுபட்டன.

கிடைத்த சாதனங்களும், அவற்றின் பாவிப்பும்

உள்நாட்டு உற்பத்தியின் விளைவாகவும், வெளிநாட்டு வியாபாரத்தின் விளைவாகவும் பொருளாதாரத்திற்குக் கிடைக்கக்கூடிய சாதனங்களின் வருடாந்த சதவீத மாற்றங்களும், இவற்றின் உபயோகத்தினால் ஏற்படும் மாற்றங்களும் அட்டவணை II—8ல் ஆராயப்பட்டுள்ளன. 1960ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1961ல் இறக்குமதி செய்யப்பட்ட சாதனங்களின் கிடைப்புத் தன்மையில் ஏற்பட்ட கணிசமான அளவு வீழ்ச்சியை இதிலிருந்து கவனிக்கக்கூடியதாய் உள்ளது. உபயோகிப்பின் சார்பில் மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் அதிகரித்ததெனினும், நுகர்ச்சியும், ஏற்றுமதிகளும் வீழ்ச்சியுற்றன.

அட்டவணை II—8

நடைமுறைச் சந்தை விலைகளின்படி பொருள்வளங்களும் அவற்றின் பாவிப்பும்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1959 | 1960 | 1961 | சதவீத மாற்றம் 1959ல் இருந்து 1960ம் ஆண்டு | சதவீத மாற்றம் 1960ல் இருந்து 1961ம் ஆண்டு |
|---|---|---|---|---|---|
| அ. பொருள் வளங்கள் | | | | | |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி* .. | 6,389 | 6,584 | 6,679 | + 3.0 | + 1·4 |
| பொருட்களினதும், சிலைக்கொள் அல்லாத சேவைகளினதும் இறக்குமதிகள் .. | 2,176 | 2,209 | 1,969 | + 1·5 | —10.8 |
| **மொத்தம்** .. .. | **8,565** | **8,792** | **8,647** | **+ 2·7** | **— 1·6** |
| ஆ. பாவிப்பு | | | | | |
| நுகர்ச்சி .. .. .. | 5,497 | 5,785 | 5,692 | + 5·2 | — 1·6 |
| மொத்த மூலதன ஆக்கம் .. .. | 1,052 | 997 | 1,043 | — 5·2 | + 4·6 |
| பொருட்களினதும், சிலைக்கொள் அல்லாத சேவைகளினதும் ஏற்றுமதிகள் .. | 2,016 | 2,011 | 1,913 | — 0·3 | — 4·9 |
| **மொத்தம்** .. .. | **8,565** | **8,792** | **8,647** | **+ 2·7** | **— 6·6** |

மூலம்: இலங்கை மகா வங்கி

* மான்யங்களைத் தவிர்த்து (விடயம் 2. அட்டவணை II—4) மறைமுக வரிகளுக்கும், கையிருப்புக்களின் மறைமுக மாற்றங்களுக்கும், புள்ளிவிபர தவறுகளுக்கும் (விடயம் 13, அட்டவணை II—4) திருத்தி அமைக்கப்பட்டு, செலவுப்படி நுகர்ச்சியினதும், மூலதன ஆக்கத்தினதும் மதிப்பீடுகளுடன் ஒத்துவரச் செய்யப்பட்டுள்ள அட்டவணை II—2ல் உள்ள IIIம் விடயமாகும்.

நடைமுறை உற்பத்திமூலம் தேசத்திற்குக் கிடைத்த வளங்கள் தனிப்பட்டோரினதும், அரசாங்கத்தினதும் நுகர்ச்சி, மூலதன ஆக்கம் ஆகிய செலவுகளின் மொத்தத்தைச் சமாளிக்கப் போதியதாக இருந்தனவோ என்பதை அட்டவணை II—9 ஆராய்கின்றது.

அட்டவணை II–9

நுகர்ச்சிச் செலவும், மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கச்செலவும், நடைமுறைச் சந்தை விலைகளின்படி, கிடைத்த பொருள்வளங்களும்

| | 1959 | | 1960 | | 1961 | |
|---|---|---|---|---|---|---|
| | தொகை பத்து இலட்சம் ரூபாய் களில் | (6)ம் வரிசை யின் சத வீதம் | தொகை பத்து இலட்சம் ரூபாய் களில் | (6)ம் வரிசை யின் சத வீதம் | தொகை பத்து இலட்சம் ரூபாய் களில் | (6)ம் வரிசை யின் சத வீதம் |
| 1. நுகர்ச்சிச் செலவு: தனிப்பட்டோர் .. | 4,448 | 70·0 | 4,709 | 72·0 | 4,625 | 69·7 |
| 2. நுகர்ச்சிச் செலவு: அரசாங்கம் .. | 1,050 | 16·5 | 1,076 | 16·5 | 1,067 | 16·1 |
| 3. மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம்: தனிப்பட்டோர் .. .. | 672 | 10·6 | 577 | 8·8 | 611 | 9·2 |
| 4. மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம்: அரசாங்கம் .. .. | 380 | 6·0 | 420 | 6·4 | 431 | 6.5 |
| 5. நடைமுறைச் சந்தை விலைகளின்படி, நுகர்ச்சிச் செலவும் மொத்த உள் நாட்டு மூலதன ஆக்கச் செலவும் .. | 6,549 | 103·1 | 6,782 | 103·7 | 6,735 | 101·5 |
| 6. நடைமுறைச் சந்தை விலைகளின்படி (திருத்தி அமைக்கப்பட்ட*) மொத்த தேசிய உற்பத்தி .. .. | 6,353 | 100·0 | 6,540 | 100·0 | 6,638 | 100·0 |
| 7. (6)ல் இருந்து (5) மேலதிகமாய் கொண்டுள்ளதை பின்வரும் விடயங்கள் நிரப்புகின்றன:— | | | | | | |
| (அ) வெளிநாட்டிலுள்ள முதலீடுகளின் கறைவு (நிகர) .. | 208 | 3·3 | 221 | 3·4 | 75 | 1·1 |
| (ஆ) சர்வதேச நன்கொடைகளினதும், மாற்றங்களினதும் நிகர வருமானங்கள் .. | — 12 | —0·2 | 22 | 0·3 | 21 | 0·3 |
| (அ) + (ஆ) .. | 196 | 3·1 | 242 | 3·7 | 96 | 1·5 |

மூலம்: இலங்கை மகா வங்கி

* மொத்த தேசிய உற்பத்தி பற்றி அட்டவணை II—3ல் இருந்து எடுக்கப்பட்ட இவ் அட்டவணையின் ஏனைய விடயங்களுடன் ஒரே சீராக விளங்கும்படியாக, அட்டவணை II—4ன். விடயம் 3ல், காட்டப்பட்டுள்ள மொத்த தேசிய உற்பத்திக்கான எண்கள், அவ் அட்டவணையின் 13ம் விடயத்தால் திருத்தி அமைகைப்பட்டுள்ளது.

நுகர்ச்சி, மூலதன ஆக்கம் ஆகியவற்றின் மொத்தச் செலவு, தேசிய உற்பத்தியைவிட மேலதிகமாக விளங்கினல், இம்மேலதிகம் சர்வதேச நன்கொடைகள், மாற்றங்கள்மூலம் அல்லது நிகர முதலீட்டு அழிப்புமூலம் (அதாவது வெளிநாட்டுச் சொத்துக்களைக் குறைத்து அல்லது வெளிநாட்டுப் பொறுப்புக்களைக் கூட்டி) ஈடுசெய்யப்படல் வேண்டும். 1959ல் இருந்து 1961 வரையுள்ள மூன்று ஆண்டுகள் ஒவ்வொன்றிலும் நாட்டின் நுகர்ச்சியிலும், மூலதன ஆக்கத்திலும் ஏற்பட்ட மொத்தச் செலவு, தேசிய உற்பத்தியிலும் பார்க்க மேலதிகமாகவே விளங்கியது. ஆனல் முந்தைய இரு ஆண்டுகளிலும் பார்க்க இம்மேலதிகம் குறைவாகவே விளங்கிற்று. 1961ம் ஆண்டில் வெளிநாட்டிலுள்ள நிகர முதலீட்ட அளவினல் நுகர்ச்சிக்கும், மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கத்திற்கும் நிதியீட்டம் செய்யப்பட்ட தொகை மொத்தத் தேசிய உற்பத்தியில் 1.1 சதவீதமாகவும், 1960ல் 3.4 சதவீதமாகவும், 1959ல் 3.3 சதவீதமாகவும் காணப்பட்டது. மொத்த தேசிய உற்பத்தியிலும் பார்க்க மிகையாக இருந்த நுகர்ச்சி செலவுகளும் மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கமும், சர்வதேச நன்கொடைகளினதும், மாற்றங்களினதும் நிகர வருவாய்களினல் (ஒவ்வொரு வருடத்தினதும் மொத்த தேசீய உற்பத்தியில் 0.3 சதவீதமளவிற்கு) 1961ம், 1960ம் ஆண்டுகளில் சிறிது உதவப்பட்டன. இதற்கு எதிராக, 1959ம் ஆண்டில் இவ்விடயங்களில் ஒரு சிறிய நிகர வெளியேற்றம் ஏற்பட்டிருந்தது. சர்வதேச நன்கொடைகளினதும், மாற்றங்களினதும் நிகரக் கொடுப்பனவுகள் இவ்வாண்டின் மொத்த தேசிய உற்பத்தியில் 0.2 சதவீதமாகக் காணப்பட்டது. 1961ல் ஏற்பட்ட குறைந்த வெளிநாட்டிலுள்ள

நிகர முதலீட்ட அழிப்பு பிரதானமாக 1961ம் ஆண்டின் முதற்பகுதியில் புகுத்தப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் பயனுகவே ஏற்பட்டது என்பதற்கு ஐயமில்லை.

நாடு எவ்வளவு தூரம் தனது நிலைபரத்துக்குள் சீவித்து அல்லது சீவிக்கத் தவறியது என்பதைப் பரிசீலனை செய்வதே அட்டவணை II—9ன் முக்கிய நோக்கமாகும். தனிப்பட்டோரினதும், அரசாங்கத்தினதும் உள்நாட்டு மூலதன ஆக்கங்களை, மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதங்களாக இவ்வட்டவணை காட்டுகின்றது. 1960ல் நுகர்ச்சியின் மட்டம் ஓர் உயர்ந்த நிலையில் இருந்தது என்பதற்கு சான்றுகள் உண்டு. இவ்வாண்டில் மொத்த தேசிய உற்பத்தியில் 88.5 சதவீதமும், இதற்கெதிராக 1959ல் 86.5 சதவீதமும், 1961ல் 85.8 சதவீதமும் நுகர்ச்சிக்குப் பிரயோகப்படுத்தப்பட்டன.

ஒரு பக்கத்தில் இறக்குமதிப் பொருட்களின், சேவைகளின் மேலும் தனிப்பட்டோரின் நுகர்ச்சிச் செலவும், மறுபக்கத்தில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் சேவைகளின் மேலும் ஏற்பட்ட செலவும் அட்டவணை I—10ல் விரிவாகப் பகுக்கப்பட்டுக் கொடுக்கப்பட்டுள்ளன. சகல மதிப்பீடுகளும் சில்லறை விலைகளிலேயே கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை II–10

நடைமுறைச் சந்தை விலைகளின்படி தனிப்பட்டோர் நுகர்ச்சிச் செலவின் அமைப்பு

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1959 | 1960 | 1961 | சதவீத மாற்றம்: 1959ல் இருந்து 1960ம் ஆண்டு | சதவீத மாற்றம்: 1960ல் இருந்து 1961ம் ஆண்டு |
|---|---|---|---|---|---|
| அ. பொருட்களினதும், சினைக்கொள் அல்லாத சேவைகளினதும் இறக்குமதிகள் .. .. | 1,952 | 1,982 | 1,755 | + 1·6 | —11·5 |
| ஆ. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களும் சேவைகளும் | | | | | |
| (i) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் | | | | | |
| அரிசி .. .. | 285 | 300 | 311 | + 5·5 | + 3·8 |
| தெங்கு உற்பத்திப் பொருட்கள் .. | 198 | 172 | 146 | —13·2 | —15·3 |
| தேயிலை .. .. | 59 | 64 | 65 | + 7·4 | + 2·2 |
| ஏனைய உணவுப் பயிர்கள் .. | 398 | 438 | 475 | + 9·9 | + 8·6 |
| புகையிலை .. .. | 20 | 20 | 21 | ... | + 5·0 |
| வெற்றிலையும் பாக்கும் .. | 46 | 50 | 50 | + 7·4 | ... |
| விறகு .. .. | 14 | 16 | 17 | + 9·7 | + 4·4 |
| கால் நடை .. .. | 159 | 160 | 172 | + 0·3 | + 7·6 |
| மீன் .. .. | 83 | 94 | 106 | +14·0 | +12·2 |
| ஏனைய விவசாயப் பொருட்களும் வனப் பொருட்களும் .. .. | 54 | 59 | 61 | + 9·5 | + 3·1 |
| கைத்தொழில் உற்பத்திகள் .. | 589 | 706 | 748 | +19·9 | + 5·9 |
| அரசாங்க உள்நாட்டுக் கொள்வனவுகள் (தவிர்) .. | – 42 | – 45 | – 44 | | |
| மொத்தம் .. .. | 1,863 | 2,033 | 2,128 | + 9·1 | + 4·7 |
| (ii) குடியிருப்புக்களின் வாடகை .. | 160 | 172 | 187 | + 7·5 | + 8·4 |
| (iii) உள்நாட்டுப் பிரயாணம் .. | 187 | 198 | 207 | + 6·3 | + 4·1 |
| (iv) சேவைகள் (முன்பு சேர்க்கப்படாதவைகள்) | | | | | |
| வீட்டுச் சேவைகள் .. .. | 200 | 203 | 209 | + 1·5 | + 3·1 |
| விடுதிகளும் போசனசாலைகளும் .. | 119 | 121 | 125 | + 1·5 | + 3·1 |
| மருத்துவம், சட்டம், கல்வி, நிதி சம்பந்தமானவைகள் .. | 55 | 55 | 52 | ... | – 5·8 |
| புதினப் பத்திரிகைகளும் ஏனைய வாசினைகளும் .. .. | 23 | 26 | 28 | +14·1 | + 6·2 |
| பொழுது போக்குக்கான களியாட்டங்கள் | 35 | 36 | 37 | + 2·9 | + 2·8 |
| ஏனைய சொந்தச் சேவைகள் .. | 50 | 51 | 52 | + 1·4 | + 3·2 |
| மொத்தம் .. .. | 482 | 492 | 503 | + 2·1 | + 2·2 |
| **மகா மொத்தம் .. ..** | **2,691** | **2,895** | **3,023** | + 7·6 | + 4·4 |
| இ. இலங்கையில் வாசஞ் செய்யாதோரால் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களும் சேவைகளும் (தவிர்) .. | **– 195** | **– 169** | **– 153** | | |
| **மீதி .. ..** | **2,496** | **2,727** | **2,870** | + 9·2 | + 5·3 |
| **மொத்த தனிப்பட்டோர் நுகர்ச்சி .. ..** | **4,448** | **4,709** | **4,625** | + 5·9 | — 1·8 |

மூலம்: இலங்கை மகா வங்கி

அட்டவணை II–11

மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | நடைமுறை விலைகளில் | | | | | நிலையான 1956ம் ஆண்டு விலைகளில் | | | | | நிலையான 1959ம் ஆண்டு விலைகளில் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | சதவீத மாற்றம் | | | | | சதவீத மாற்றம் | | | | | சதவீத மாற்றம் | |
| | 1959 | 1960 | 1961 | 1959ல் இருந்து 1960ம் ஆண்டு | 1960ல் இருந்து 1961ம் ஆண்டு | 1959 | 1960 | 1961 | 1959ல் இருந்து 1960ல் ஆண்டு | 1960ல் இருந்து 1961ம் ஆண்டு | 1959 | 1960 | 1961 | 1959ல் இருந்து 1960ம் ஆண்டு | 1960ல் இருந்து 1961ம் ஆண்டு |
| **அ. தனிப்பட்டோர் மூலதன ஆக்கம்** | | | | | | | | | | | | | | | |
| I. மொத்த நிலையான மூலதன ஆக்கம் | | | | | | | | | | | | | | | |
| பயிர் நடுகையும் மாற்று நடுகையும் | 54 | 52 | 56 | — 2·8 | + 6·9 | 50 | 47 | 50 | — 6·2 | + 6·9 | 54 | 50 | 54 | — 6·5 | + 7·0 |
| கட்டட வேலையும் ஏனைய சில கட்டட ஆக்கத் தொழிலும் .. | 324 | 335 | 329 | + 3·4 | — 1·8 | 272 | 284 | 314 | + 4·4 | +10·5 | 324 | 338 | 373 | + 4·4 | +10·5 |
| ஆலையும், இயந்திரங்களும் .. | 106 | 81 | 109 | —23·8 | +35·1 | 92 | 61 | 70 | —33·6 | +14·1 | 106 | 70 | 80 | —33·6 | +14·2 |
| போக்குவரத்து .. .. | 119 | 82 | 56 | —30·6 | —32·0 | 113 | 92 | 44 | —18·6 | —52·1 | 119 | 97 | 46 | —18·5 | —48·9 |
| இறக்குமதி செய்யப்பட்ட மூலதனப் பொருட்கள் (முன்பு சேர்க்கப்படாதவைகள்) .. .. | 55 | 55 | 49 | ... | —11·8 | 50 | 49 | 43 | — 1·4 | —12·5 | 55 | 54 | 47 | — 1·6 | —12·5 |
| **மொத்தம்** .. .. | **657** | **605** | **598** | — 7·9 | — 1·1 | **576** | **532** | **520** | — 7·6 | — 2·3 | **657** | **609** | **601** | — 7·3 | — 1·3 |
| II. கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றம் | | | | | | | | | | | | | | | |
| தேயிலை .. .. | + 3 | —10 | — | | | + 3 | —11 | — | | | + 3 | —10 | — | | |
| இரப்பர் .. .. | — 2 | —27 | +19 | | | — 3 | —25 | +21 | | | — 2 | —24 | +21 | | |
| கால் நடை .. .. | +15 | + 9 | — 5 | | | + 14 | + 6 | — 5 | | | +15 | + 7 | — 5 | | |
| **மொத்தம்** .. .. | +15 | —27 | +13 | | | +15 | —30 | +17 | | | +15 | —27 | +15 | | |
| **ஆகக் கூடிய மொத்தம்** .. .. | **672** | **577** | **611** | —14·1 | + 5·9 | **591** | **502** | **537** | —15·0 | + 6·8 | **672** | **582** | **616** | —13·4 | + 5·9 |
| **ஆ. அரசாங்க மூலதன ஆக்கம்** | | | | | | | | | | | | | | | |
| I. மொத்த நிலையான மூலதன ஆக்கம் .. | 394 | 386 | 464 | — 2·1 | +20·2 | 326 | 316 | 384 | — 3·2 | +21·5 | 394 | 380 | 465 | — 3·6 | +22·3 |
| II. உத்தரவாத விலைத்திட்ட நெற் கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றம் .. | —15 | +33 | —33 | | | —15 | +33 | —33 | | | —15 | +33 | —33 | | |
| **மொத்தம்** .. .. | **380** | **420** | **431** | +10·5 | + 2·8 | **312** | **349** | **351** | +12·1 | + 0·4 | **380** | **413** | **432** | + 8·9 | + 4·4 |
| **இ. மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம்** .. | **1,052** | **997** | **1,043** | — 5·2 | + 4·6 | **903** | **852** | **887** | — 5·5 | + 4·2 | **1,052** | **995** | **1,048** | — 5·4 | + 5.3 |

மூலம்: இலங்கை மகா வங்கி

இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களினதும் சேவைகளினதும் நுகர்ச்சியில் ஏற்பட்ட வீழ்ச்சியைவிட, தாழ்ந்த விலைகளின் விளைவாக தெங்கு உற்பத்திப் பொருட்களினது சில்லறை விலைப் பெறுமானத்திலும், மருத்துவ சேவையின் மீதும் சட்ட சேவையின்மீதும், ஏனைய தொழிற்துறை சேவைகளின்மீதும் உண்டான செலவிலும் வீழ்ச்சிகள் ஏற்பட்டிருப்பதைக் காணலாம். முன்னர் குறிப்பிட்டுள்ளபடி 1960ம், 1961ம் ஆண்டுகளில் கைத்தொழில் நுகர்ச்சிப் பொருட்களின் உண்மையான நிகர உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியினால், இவ்வட்டவணையில் காணப்படும் கைத்தொழில் பொருட்களின் சில்லறைப் பெறுமானங்களில் ஏற்பட்ட அதிகரிப்புகளுக்கும் விலைக்காரணிகளே பெருமளவில் காரணமாகும்.

நடைமுறை விலைகளிலும், நிலையான 1956ம், 1959ம் ஆண்டு விலைகளில் மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கத்தினது பாகுபாட்டை அட்டவணை II—11 அளிக்கின்றது. இவ்வட்டவணையில் காட்டப்பட்டுள்ள விரிவான மதிப்பீடுகளிலிருந்து தென்படுவது என்னவென்றால், தனிப்பட்டோர் துறையின் (அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் உட்பட) மொத்த மூலதன ஆக்கத்தில், முன்னர் குறிப்பிட்டுள்ளபடி 1960ம், 1961ம் ஆண்டுகளில் ஏற்பட்ட வீழ்ச்சிகளுக்கு "போக்குவரத்தும்" "வேறெங்கும் சேர்க்கப்படாத இறக்குமதி செய்யப்பட்ட மூலதனப் பொருட்களும்" என்ற தொகுதியில் ஏற்பட்ட வீழ்ச்சிகளே பிரதான காரணமாகும். குறிப்பாக போக்குவரத்திற்தான் தீட்சணமான வீழ்ச்சிகள் ஏற்பட்டன. பட்டியல்களின் நடமாட்டங்கள் சம்பந்தமான (தேயிலை, இரப்பர், கால்நடைகள் ஆகியவற்றை மட்டும் சேர்த்துக் கணிக்கும்பொழுது) காணக்கூடியது என்னவென்றால், 1960ம் ஆண்டு கையிருப்புக்கள் வீழ்ச்சியடைந்ததெனினும், 1959ம், 1961ம் ஆண்டுகளில் கையிருப்புகள் அதிகரித்தன.

கைத்தொழில் மூலங்களின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தி

கைத்தொழில் மூலங்களின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1959ம், 1960ம் ஆண்டுகளுக்கான திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீடுகளும், 1961ம் ஆண்டுக்கான தற்காலிகமான மதிப்பீடுகளும், நடைமுறைச் சிணைக் கொள்விலைகளில் அட்

அட்டவணை II—12

நடைமுறைச் சிணைக்கோள் விலைகளின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தி, கைத்தொழில் மூலங்களின்படி

| கைத்தொழில் | 1959 | | 1960 | | 1961 | | சதவீத மாற்றங்கள் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பத்து இலட்சம் ரூபாய்களில் | சத வீதம் | பத்து இலட்சம் ரூபாய்களில் | சத வீதம் | பத்து இலட்சம் ரூபாய்களில் | சத வீதம் | 1959ல் இருந்து 1960ம் ஆண்டு | 1960ல் இருந்து 1961ம் ஆண்டு |
| I. விவசாயமும், வனவியலும், வேட்டையாடுதலும், மீன் பிடித்தலும்* .. | 2,475 | 42·1 | 2,628 | 42·6 | 2,616 | 41·4 | + 6·2 | — 0·5 |
| II. சுரங்கத் தொழிலும், பார்க்குறித் தொழிலும் .. .. | 12 | 0·2 | 13 | 0·2 | 13 | 0·2 | + 9·0 | — 3·8 |
| III. தயாரிப்புகள் (கட்டட ஆக்கப் பொருட்களைத் தவிர்த்து) .. | 325 | 5·5 | 356 | 5·8 | 376 | 6·0 | + 9·8 | + 5·6 |
| IV. கட்டட ஆக்கத் தொழில் (கட்டட ஆக்கப் பொருட்களையும் சேர்த்து) .. | 532 | 9·0 | 508 | 8·2 | 609 | 9·6 | — 4·4 | +19·8 |
| V. போக்குவரத்தும், களஞ்சியமும், செய்தி அறிவிப்பும் .. | 548 | 9·3 | 576 | 9·3 | 587 | 9·3 | + 5·2 | + 1·9 |
| VI. மொத்த வியாபாரமும், சில்லறை வியாபாரமும் .. .. | 702 | 11·9 | 730 | 11·8 | 698 | 11·1 | + 4·1 | — 4·5 |
| VII. குடியிருப்புக்களின் உடமை .. | 144 | 2·4 | 154 | 2·5 | 167 | 2·6 | + 7·5 | + 8·4 |
| VIII. அரசாங்கப் பரிபாலனமும், பாதுகாப்பும் .. .. | 368 | 6·3 | 384 | 6·2 | 418 | 6·6 | + 4·3 | + 8·9 |
| IX. சேவைகள் (முன்பு சேர்க்கப்படாதவைகள்) | | | | | | | | |
| (அ) அரசாங்க மருத்துவ, சுகாதார, கல்வி, ஒலிபரப்பு, வானமண்டல சாஸ்திர சேவைகள் .. | 340 | 5·8 | 378 | 6·1 | 380 | 6·0 | +11·1 | + 0·6 |
| (ஆ) ஏனைய சகல சேவைகள் .. | 437 | 7·4 | 443 | 7·2 | 450 | 7·1 | + 1·4 | + 1·6 |
| மொத்தம் .. | 777 | 13·2 | 821 | 13·3 | 830 | 13·1 | + 5·6 | + 1·2 |
| **மொத்த உள்நாட்டு உற்பத்தி** .. | 5,881 | 100·0 | 6,171 | 100.0 | 6,314 | 100·0 | + 4·9 | + 2·3 |

மூலம்: இலங்கை மகா வங்கி

* விவசாய ஏற்றுமதிப் பொருட்களின் பதனீடுகளையும் சேர்த்துள்ளது.

அட்டவணை II–13

ஏற்றுமதி விலைகளின்படி கணிக்கப்பட்டுள்ள ஏற்றுமதிப் பெறுமானங்கள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | நடைமுறை விலைகளில் | | | | | நிலையான 1956ம் ஆண்டு விலைகளில் | | | | | நிலையான 1959ம் ஆண்டு விலைகளில் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | சதவீத மாற்றங்கள் | | | | | சதவீத மாற்றங்கள் | | | | | சதவீத மாற்றங்கள் | |
| | 1959 | 1960 | 1961 | 1959ல் இருந்து 1960ம் ஆண்டு | 1960ல் இருந்து 1961ம் ஆண்டு | 1959 | 1960 | 1961 | 1959ல் இருந்து 1960ம் ஆண்டு | 1960ல் இருந்து 1961ம் ஆண்டு | 1959 | 1960 | 1961 | 1959ல் இருந்து 1960ம் ஆண்டு | 1960ல் இருந்து 1961ம் ஆண்டு |
| **உள்நாட்டு ஏற்றுமதிகள்** | | | | | | | | | | | | | | | |
| —தேயிலை | 1,045 | 1,096 | 1,114 | + 4·9 | + 1·7 | 1,151 | 1,229 | 1,277 | + 6·9 | + 3·9 | 1,045 | 1,115 | 1,158 | + 6·7 | + 3·9 |
| —இரப்பர் | 298 | 378 | 260 | +27·1 | —31·3 | 310 | 351 | 298 | +13·2 | —15·2 | 298 | 337 | 286 | +13·2 | —15·2 |
| —தேங்காயும் தெங்கு உற்பத்திப் பொருட்களும் | 285 | 238 | 247 | —16·5 | + 2·7 | 202 | 190 | 254 | — 5·6 | +33·3 | 285 | 270 | 359 | — 5·6 | +33·2 |
| —ஏனையவை | 64 | 62 | 59 | —33·5 | — 5·1 | 67 | 59 | 62 | —11.8 | + 4·4 | 64 | 56 | 59 | —11·7 | + 4·4 |
| —மொத்தம் | 1,692 | 1,775 | 1,681 | + 4·9 | — 5·3 | 1,729 | 1,830 | 1,890 | + 5·8 | + 3·3 | 1,692 | 1,778 | 1,862 | + 5·1 | + 4·7 |
| **திரும்பி ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்கள்** —மொத்தம் | 62 | 57 | 52 | — 7·9 | — 7·9 | 63 | 60 | 61 | — 4·8 | + 1·5 | 62 | 59 | 60 | — 4·7 | + 1·4 |

மூலங்கள்: இலங்கைச் சுங்கப் புள்ளி விபரங்களும், இலங்கை மகா வங்கியும்

டவணை II—12ல் காட்டப்பட்டுள்ளன. உற்பத்தியின் அமைப்பைப் பரிசீலனை செய்யும்பொழுது 1959ம் ஆண்டிலிருந்து 1960 ஆண்டுவரையுள்ள மூன்று வருட காலத்திலும், இவ்வட்டவணையில் காட்டப்பட்டுள்ளபடி, பொருளாதார அமைப்பில் முக்கியத்துவம் வாய்ந்த மாற்றங்கள் ஏற்பட்டன என்பதற்கான சான்றுகள் ஏதுவும் கிடையாது. ஒரு அளவுக்கு சில சிறிய நடமாட்டங்களைக் காணலாம் எனினும், 1959ம் ஆண்டிற்கும் 1960ம் ஆண்டிற்கும் இடையில் ஏற்பட்ட மாற்றங்களை நேர்மாறான திசையில் மாற்றுவதே 1961ல் ஏற்பட்ட பிரதான போக்காகும். 1960ம் ஆண்டிற் பார்க்க 1961ல் ஏற்பட்ட சதவீத மாற்றங்களை, 1959ம் ஆண்டிற் பார்க்க 1960ல் ஏற்பட்ட சதவீத மாற்றங்களுடன் ஒப்பிடுகையில் தென்படுவது என்னவென்றால், கட்டட ஆக்கக் கைத்தொழில்களின் உற்பத்தி (கட்டட ஆக்கப் பொருட்களை உற்பத்தி செய்யும் கைத்தொழில்கள் உட்பட) 1961ல் பெரிய அதிகரிப்பைக் காட்டிற்று. 1960ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1961ம் ஆண்டு பின்வரும் விடயங்கள் மட்டுமே வீழ்ச்சிகளைக் காட்டின: அவை யாவன, மொத்த வியாபாரமும், சில்லறை வியாபாரமும், சுரங்கத் தொழிலும், பார்க்குழித் தொழிலும், விவசாயம், வனவியல், வேட்டையாடுதல், மீன்பிடித்தல் முதலியன ஆகும்.

உற்பத்தியும் ஏற்றுமதிகளும்

நடைமுறை விலைகளிலும், நிலையான 1956ம், 1959ம் ஆண்டு விலைகளிலும் ஏற்றுமதிப் பெறுமானங்களில் ஏற்பட்ட நடமாட்டங்கள் அட்டவணை II—13ல் காட்டப்பட்டுள்ளன. சிறிது தாழ்ந்த விலைகள் கிடைத்தபோதிலும், தேயிலை ஏற்றுமதிகளின் பெறுமானம் 1961ல் ஒரு அதிகரிப்பைக் காட்டியுள்ளது, நடைமுறை விலைகளிலும் பார்க்க நிலையான 1956ம், 1959ம் ஆண்டு விலைகளில் இவ்வதிகரிப்பு உயர்ந்ததாகவே காணப்பட்டது. 1960ம் ஆண்டிற் பார்க்க 1961ல் ஏற்பட்ட 4 சதவீதத்திற்கும் குறைவான அதிகரிப்புடன் ஒப்பிடுகையில், 1959ல்

அட்டவணை II–14

உற்பத்தியாளர்களின் நடைமுறை விலைகளில், உள்நாட்டு நுகர்ச்சிக்கென உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் பெறுமானம்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1959 | 1960 | 1961 | சதவீத மாற்றம்: 1959ல் இருந்து 1960ம் ஆண்டு | சதவீத மாற்றம்: 1960ல் இருந்து 1961ம் ஆண்டு |
|---|---|---|---|---|---|
| **(i) விவசாயமும், வனவியலும், கால்நடையும், மீன்பிடித்தலும்** | | | | | |
| அரிசி .. .. | 379 | 469 | 483 | +23·8 | + 3·0 |
| தேங்காயும், தெங்கு உற்பத்திப் பொருட்களும் | 169 | 151 | 132 | – 10·8 | – 12·2 |
| தேயிலை .. .. | 51 | 53 | 53 | + 4·3 | ... |
| ஏனைய உணவுப் பயிர்கள் .. | 327 | 354 | 386 | + 8·4 | + 9·0 |
| புகையிலை .. .. | 15 | 14 | 15 | – 6·7 | + 7·1 |
| வெற்றிலையும் பாக்கும் .. | 34 | 37 | 38 | + 7·6 | + 1·4 |
| விறகு .. .. | 12 | 14 | 15 | +13·8 | + 4·3 |
| கால்நடை .. .. | 137 | 135 | 136 | – 1·0 | + 0·6 |
| மீன் .. .. | 60 | 69 | 77 | +13·9 | +11·9 |
| ஏனையவை .. .. | 47 | 51 | 53 | + 9·4 | + 3·1 |
| இறக்குமதி செய்து பாவிக்கப்பட்ட பொருட்கள் (தவிர்) .. .. | – 19 | – 20 | – 19 | + 2·6 | – 3·0 |
| உள்நாட்டு உற்பத்தியின் பெறுமானம் .. | **1,211** | **1,327** | **1,368** | **+ 9·6** | **+ 3·1** |
| **(ii) கைத்தொழில் (மூலதன அபிவிருத்தியைத் தவிர்த்து)** | | | | | |
| ஆலைக் கைத்தொழில்கள் .. | 315 | 383 | 409 | +21·5 | + 6·7 |
| குடிசைக் கைத்தொழில்கள் .. | 99 | 101 | 104 | + 1·5 | + 3·1 |
| இறக்குமதி செய்து பாவிக்கப்பட்ட பொருட்கள் (தவிர்) .. .. | – 93 | –129 | –138 | +39·1 | + 6·4 |
| உள்நாட்டு உற்பத்தியின் பெறுமானம் .. | **321** | **354** | **375** | **+10·2** | **+ 5·8** |

மூலங்கள்: இலங்கை மகா வங்கி, குடிசன் மதிப்பு, புள்ளி விபரத் திணைக்களம், கைத்தொழில் திணைக்களம், மீன்பிடித் திணைக்களம் ஆகியன.

பார்க்க 1960ல் 7 சதவீதத்திற்குச் சிறிது குறைவான அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. நடைமுறை விலைகளில் இரப்பரின் ஏற்றுமதிப் பெறுமானத்தில் 31 சதவீத வீழ்ச்சி ஏற்பட்டதெனினும், நிலையான விலைகளின்படி இப்பெறுமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி 15 சதவீதமாகும். தெங்கு உற்பத்திப் பொருட்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பு, ஏற்றுமதியில் ஏற்பட்ட பிரதான வீழ்ச்சியின் விளைவுகளை ஈடாக்க உதவிற்று.

நடைமுறை உற்பத்தியாளர்களின் விலைகளில் கணிக்கப்பட்டுள்ள நெல் உற்பத்தியினதும், உள்நாட்டு நுகர்ச்சிக்காக உற்பத்தி செய்யப்பட்ட ஏனைய பொருட்களினதும் மதிப்பீடுகள் அட்டவணை II—14ல் காட்டப்பட்டுள்ளன. முன்னர் கூறப்பட்ட குறிப்பின்படி 1960ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 1961ம் ஆண்டில் விவசாயத் தொகுதியில் ஏற்பட்ட சிறிய சதவீத அதிகரிப்பு, 1961ம் ஆண்டில் அரிசி உற்பத்தியில் ஏற்பட்ட சிறிய சதவீத அதிகரிப்பினால் பெருமளவில் உண்டானது என்பது, இவ்வட்டவணையில் காட்டப்பட்டுள்ள விரிவாக்கப்பட்ட மதிப்பீடுகளில் இருந்து வெளியாகின்றது. கைத்தொழில் உற்பத்தித் துறையில் (கட்டட ஆக்கக் கைத்தொழில்களையும், கட்டட ஆக்கப் பொருட்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டிருக்கும் கைத்தொழில்களையும் தவிர்த்து) 1961ம் ஆண்டில் ஏற்பட்ட உற்பத்தி அதிகரிப்பு தற்காலிகமான மதிப்பீடுகளின்படி 5.8 சதவீதமாகவும், இதற்கெதிராக 1960ம் ஆண்டில் 10.2 சதவீதமாகவும் காணப்பட்டது. 1960ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 1961ம் ஆண்டின் அதிகரிப்பு விகிதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி, 1961ம் ஆண்டுக்கான ஆலைக் கைத்தொழில்கள் பற்றிக் கிடைத்த தரவுகளில் தாழ்ந்த விகித அதிகரிப்புக் காட்டப்பட்டுள்ளதன் காரணமாகவே ஏற்பட்டது. எனினும் இவ்விபரங்களின்மேல் முழு நம்பிக்கை வைத்தல் இயலாது. இவ்வட்டவணையில் காட்டப்பட்டுள்ள குடிசைக் கைத்தொழில் உற்பத்திபற்றிய எண்களும் ஐயப்பாடுள்ளவையே.

பிரதான ஏற்றுமதிப் பொருட்கள் பற்றியும், நெல் உற்பத்தி பற்றியும் விரிவான குறிப்புகள் பின்தொடருகின்றன.

தேயிலை:- 1960ம் ஆண்டு முடிவில் 581,821 ஏக்கர்களில் தேயிலை உற்பத்தி செய்யப்பட்டிருக்க, 1961ம் ஆண்டு முடிவில் 584,551 ஏக்கர்கள் தேயிலை உற்பத்தியின்கீழ் கொண்டுவரப்பட்டன. 1960ம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட தேயிலையின் மொத்தத் தொகை 4350 இலட்சம் இறாத்தல்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. 1961ம் ஆண்டு உற்பத்தியில் ஏற்பட்ட 200 இலட்சம் இறாத்தல் அதிகரிப்பு 1960ம் ஆண்டு ஏற்பட்ட 220 இலட்சம் இறாத்தல் அதிகரிப்பிலும் பார்க்கச் சிறிதளவே குறைந்ததாகும். 1961ம் ஆண்டில் 4.6 சதவீதமாக விளங்கிய அதிகரிப்பு விகிதம், கடந்த 10 ஆண்டுகளில் ஏற்பட்ட 3.8 சதவீத மதிப்பிடப்பட்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் மிகவும் சாதகமாகவே விளங்குகின்றது. 1961ல் ஏற்பட்ட தேயிலை உற்பத்தியின் அதிகரிப்பிற்கு மத்திய பிரதேச தேயிலைகள் முக்கிய பங்கை அளித்துள்ளன. 1960ம் ஆண்டில் 1530 இலட்சம் இறாத்தல்களாக இருந்த மத்திய பிரதேச தேயிலையின் மொத்த உற்பத்தி 1961ம் ஆண்டில் 1630 இலட்சம் இறாத்தல்களாக அதிகரித்தது.

ஒரு ஏக்கருக்கான தேயிலை விளைச்சல் 1961ம் ஆண்டில் 778 இறாத்தல்களாக இருந்தது; இதற்கெதிராக 1960ல் 748 இறாத்தல்களாகவும், 1959ல் 714 இறாத்தல்களாகவும் காணப்பட்டன. தேயிலை மாற்று நடுகைத் திட்டம் நிதானமாகவே விருத்தியடைந்தபோதிலும், 1961ம் ஆண்டு விளைச்சலில் அதிகரிப்பு ஏற்பட்டது. உயர்ந்த விளைச்சல் அளிக்கும் இனத்தைச் சார்ந்தவைகளைக் கொண்டு

மாற்று நடுகை செய்வதே பத்தாண்டுத் திட்டத்திலுள்ள பிரதான சிபார்சுகளில் ஒன்ருகும். இதில் விபரிக்கப்பட்டுள்ளபடி 1968ம் ஆண்டு முடிவுவரை ஏறக்குறைய 50,000 ஏக்கர்களில் மாற்று நடுகை செய்யப்படும். ஆயினும், 1961ம் ஆண்டு 1298 ஏக்கர்களில் மட்டுமே மாற்று நடுகை செய்யப்பட்டது.

1961ம் ஆண்டு 4,260 இலட்சம் இருத்தல்களாக விளங்கிய மொத்த தேயிலை ஏற்றுமதியின் தொகை, 1960ம் ஆண்டுக்கான தொகையாகிய 4,100 இலட்சம் இருத்தல்களுடன் ஒப்பிடுகையில் 4 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. ஆயினும் சராசரி விலை 1960ம் ஆண்டு மட்டத்தில் இருந்து 2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தமையால், தேயிலை ஏற்றுமதிகளின் மொத்தப் பெறுமானம் 2 சதவீத அதிகரிப்பை மட்டுமே காட்டியது.

இரப்பர்:— இரப்பர் உற்பத்திக்குக்கீழ் இருந்த ஏக்கர் கணக்கு 1960ம் ஆண்டில் 688,123 ஏக்கர்களிலிருந்து 1961ம் ஆண்டு 669,013 ஏக்கர்களுக்கு உயர்ந்தது. 1961ம் ஆண்டு முடிவில் மாற்று நடுகை செய்யப்பட்ட பிரதேசம் 169,727 ஏக்கர்களாகும். இதில் 9,742 ஏக்கர்கள் 1961ம் ஆண்டில் மாற்று நடுகை செய்யப்பட்டன. 1953ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இரப்பர் மாற்று நடுகை மான்யத்திட்டம், சிக்கனமற்றவை என அப்பொழுது கருதப்பட்ட ஏறக்குறைய 200,000 ஏக்கர் இரப்பர் நிலத்தை, 1962ம் ஆண்டு முடிவில் மாற்று நடுகை செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இக்குறிக்கோளை அடையும் பொருட்டு, 1962ம் ஆண்டுக் காலத்தில் ஏறக்குறைய 30,000 ஏக்கர்களை மாற்று நடுகைகளுக்குக்கீழ் கொண்டு வரவேண்டும் என்பதையே இது குறிக்கின்றது.

1960ம் ஆண்டு 2180 இலட்சம் இருத்தல்களாக இருந்த இரப்பர் உற்பத்தி, 1961ம் ஆண்டில் 2150 இலட்சம் இருத்தல்களுக்குச் சிறிது வீழ்ச்சியடைந்தது. ஓர் இரப்பர் மரம் பயனளிக்கத் தொடங்க ஏறக்குறைய 7 வருடங்கள் ஆகும். ஆகையால் 7 வருடங்களுக்கு முன் (1954ம் ஆண்டில்) மாற்று நடுகை செய்வதற்கும், புனர்நடுகை செய்வதற்கும் ஒப்புக்கொள்ளப்பட்ட தொகையைக் கவனித்தல் விரும்பத் தகுந்ததாகும். 1954ம் ஆண்டில் பிரதானமாக உயர்ந்த விளைச்சல் அளிக்கும் இனத்தைச் சேர்ந்த இரப்பரைக்கொண்டு 18,301 ஏக்கர்களில் மாற்று நடுகை செய்யப்பட்டதுடன் இதற்கு மேலதிகமாக 1,879 ஏக்கர் புதிய காணியும் இப்பயிர் செய்கைக்குக்கீழ் கொண்டுவரப்பட்டது. இந்த 20,180 ஏக்கர்களும் 1961ம் ஆண்டில் இரப்பர் விளைச்சலைக் கொடுக்க ஆரம்பித்திருக்கும். இம்மேலதிகமான உயர்ந்த விளைச்சல் இரப்பர் இருந்தபொழுதிலும், உண்மையில் உற்பத்தி 30 இலட்சம் இருத்தல் வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது. இதில் ஒரு பகுதியை மாற்று நடுகைச் செயல்முறையின் விளைவால் தற்காலிகமாக உற்பத்தியிலிருந்து நீக்கப்பட்டவைகளினுலும், மறுபகுதியை புனர்நடுகை செய்யப்பட்ட பிரதேசங்கள் இன்னும் முதிர்ச்சியடையாது இருப்பதினுலும் விளக்கலாம். ஆயினும், 1961ம் ஆண்டின் பிந்திய அரைப் பகுதியில் ஏற்பட்ட பெருமழை காரணமாக வடித்தற் தொழில்களில் தடைகள் ஏற்பட்டிருக்கக்கூடும். மேலும் இரப்பர் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியும், உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குக் காரணமாயிருக்கக்கூடும்.

இரப்பர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள மொத்தப் பிரதேசத்தில், தற்பொழுது வடிக்கப்படாத ஏறக்குறைய 20 சதவீதத்தைத் தவிர்த்துக் கணிக்கையில், 1960ம் ஆண்டு 408 இருத்தல்களாக இருந்த ஒரு ஏக்கரின் சராசரி விளைவு, 1961ம் ஆண்டில் கிட்டத்தட்ட 400 இருத்தல்களுக்கு வீழ்ச்சியுற்றது.

1960ம் ஆண்டு 2,350 இலட்சம் இருத்தல்களாக விளங்கிய இரப்பர் ஏற்று மதி அளவுடன் ஒப்பிடுகையில், 1961ம் ஆண்டு இது 1970 இலட்சம் இருத்தல் களாக விளங்கியது. அளவில் ஏற்பட்ட 16 சத வீத வீழ்ச்சியின் விளைவாகவும், விலையில் ஏற்பட்ட 18 சதவீத வீழ்ச்சியின் விளைவாகவும், இந்த ஏற்றுமதிகளால் தேறிய பெறுமானம் 31 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது.

தெங்கு:- 1960ம் ஆண்டில் 22,200 இலட்சம் காய்களாக விளங்கிய தெங்கு உற்பத்தியுடன் ஒப்பிடுகையில், 1961ல் இவ்வுற்பத்தி 25,960 இலட்சம் காய்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. காய் நியதியின்படி 12,410 இலட்சம் காய்களென மதிப்பிடப்பட்டுள்ள மொத்த உள்நாட்டு நுகர்ச்சியையும், 13,550 இலட்சம் காய்கள் என மதிப்பிடப்பட்டுள்ள ஏற்றுமதிகளையும் இவ்வுற்பத்தி மதிப்பீட்டுத் தொகை கொண்டுள்ளது. கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்கள்பற்றிய தரவு கள் கிடையாதபடியால், ஏற்றுமதிகளில் ஏற்படும் மாறுதல்களே பெரும்பாலும் உற்பத்தி அளவில் ஏற்படும் மாற்றங்களை நிர்ணயிக்கின்றன.

தெங்கு உற்பத்தியில் 1960ம் ஆண்டிற் பார்க்க, 1961ம் ஆண்டு ஏற்பட்ட 3,760 இலட்சம் காய்கள் அதிகரிப்பு, பிரதானமாக 1961ம் ஆண்டில் நிலவிய சாதகமான வானிலை காரணமாகவும், வளமாக்கிகளின் பாவிப்பில் கடந்த சில ஆண்டுகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் பயனாகவும் ஏற்பட்டது. காய் நியதியின் படிக் கணிக்கையில், மூன்று பிரதான தெங்குப் பொருட்களினதும் மொத்த ஏற் றுமதி அளவு 39 சதவீத (1) அதிகரிப்பைக் காட்டியுள்ளது. மூன்று பிரதான தெங்கு உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி விலைக் குறிகாட்டியில் காட்டப்பட் டுள்ள 22 சதவீத விலை வீழ்ச்சியின் பயனாக 1961ம் ஆண்டில் தேறிய பெறுமான மாகிய 2020 இலட்சம் ரூபாய்கள், 1960ம் ஆண்டில் தேறிய பெறுமானத்திலும் பார்க்க 10 சதவீதத்தால் மட்டுமே உயர்ந்தது ஆகும்.

நெல்:- 1961ம் ஆண்டுக்கான நெல் உற்பத்தி 432 இலட்சம் புசல்கள் எனத் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது. 1960ம் ஆண்டுக்கான திருத்தி அமைக்கப் பட்ட உற்பத்தித் தொகையாகிய 431 இலட்சம் புசல்களில் பார்க்க இது சிறிது உயர்ந்தது ஆகும். 1959/60ல் 263 இலட்சம் புசல்களாக விளங்கிய பெரும்போக நெல் விளைச்சல் 1960/61ல் 271 இலட்சம் புசல்களுக்கு ஒரு அதிகரிப்பைக் காட் டியது. ஆயினும் 1960ம் ஆண்டில், 168 இலட்சம் புசல்களாக இருந்த சிறுபோக நெல் விளைச்சல், 1961ம் ஆண்டு 161 இலட்சம் புசல்களுக்கு வீழ்ச்சியுற்றது. 1959/60ல் அருவி வெட்டப்பட்ட ஒரு நிகர ஏக்கருக்கு 35.9 புசல்களாக இருந்த பெரும்போக நெல் விளைச்சல், 1960/61ல் அருவி வெட்டப்பட்ட நிகர ஏக்கருக் கான சராசரி விளைச்சலாகிய 36.1 புசல்களிலும் பார்க்கச் சிறிது தாழ்ந்ததா கும். தற்காலிகமான மதிப்பீடுகளின்படி, அருவி வெட்டப்பட்ட நிகர ஏக்கருக் கான சிறுபோக நெல் விளைச்சலும், 1960ம் ஆண்டில் இருந்த 36.8 புசல்களில் இருந்து 1961ம் ஆண்டு 36.5 புசல்களுக்கு ஒரு சிறிய வீழ்ச்சியைக் காட்டிற்று.

உத்தரவாத விலைத் திட்டத்தின்கீழ் 1961ம் ஆண்டு கொள்வனவு செய்யப் பட்ட நெல்லின் மொத்தத் தொகையாகிய 226 இலட்சம் புசல்களுடன் ஒப்பிடு கையில், 1960ம் ஆண்டில் இது 218 இலட்சம் புசல்களாக இருந்தது.

அரிசி நியதிப்படி கணிக்கையில், 1960ம் ஆண்டு 561,400 தொன்களாக விளங்கிய நெல் உற்பத்தியுடன் ஒப்பிடுகையில், 1961ம் ஆண்டு இது 562,800 தொன்களாக இருந்தது. உள்நாட்டில் உபயோகிக்கப்படும் அரிசி 1,056,400 தொன்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. 1961ம் ஆண்டில் இறக்குமதி செய்யப் பட்ட அரிசியின் அளவு 461,600 தொன்களாகும்.

---

(1) தெங்கு உற்பத்திப் பொருட்களுக்கான மகாவங்கியின் அளவுக் குறிகாட்டியின்படி, இவ்வதிகரிப்பு சிறிது உயர்ந்ததாகவே (41 சத வீதம்) காணப்படுகின்றது.

# தேசிய உற்பத்திக்கும் செலவிற்குமான நுணுக்கமான குறிப்புக்கள்

30ம் பக்கத்தில் உள்ள பிற்குறிப்பில் கூறப்பட்டபடி, இவ்வறிக்கையில் பிரசுரிக்கப்பட்டுள்ள 1959ம், 1960ம் ஆண்டுகளுக்கான தேசிய உற்பத்தியினதும் செலவினதும் மதிப்பீடுகள், குடிசன மதிப்பு புள்ளி விபரத் திணைக்களத்தினுலும் (இலங்கை மகாவங்கியின் முந்தைய வருடாந்த அறிக்கைகளிலும்) முன்னர் பிரசுரிக்கப்பட்ட மதிப்பீடுகளில் இருந்து வேறுபடுகின்றன. இலங்கையில் இதுவரையும் உபயோகிக்கப்பட்ட முறைகளைத் திருத்தியமைத்து தற்போதைய மதிப்பீடுகள் கணிக்கப்பட்டமையே இதற்குக் காரணமாகும்.

கடந்த சில ஆண்டுகளில் குடிசன மதிப்பு புள்ளி விபரத் திணைக்களத்தினுல் புள்ளி விபரங்கள் நியாயமான அளவு சீர்திருத்தப்பட்டபோதிலும் இதுவரையும் உபயோகத்திலிருந்த முறைகள் பிரதானமாக 1952ம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட தேசிய வருமானம் பற்றிய திரு. வில்லியம்சின் அறிக்கையிற் குறிப்பிடப்பட்ட திட்டத்தையே தழுவியுள்ளன. திரு வில்லியம்ஸ் நிறுவிய திட்டம் இலங்கையில் முன்னர் உபயோகத்திலிருந்த முறைகளிலும் பார்க்க முன்னேற்றமுடையதாக இருந்தபொழுதிலும், இது பலதரப்பட்ட குறைபாடுகளினுல் பாதிக்கப்பட்டுள்ளது. தற்போதைய மதிப்பீடுகளில் புகுத்தப்பட்டுள்ள திருத்தங்கள் இக்குறைபாடுகளிற் சிலவற்றை நீக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. ஒருபுறத்தில் மதிப்பீடுகளின் கொள்கை அடிப்படையைச் சீர்திருத்துவதனுலும், மறுபுறத்தில் பொருளாதார இயக்கத்தைக் கூடுதலாக இம்மதிப்பீடுகளில் உள்ளடக்குவதாலும், இன்னெரு புறத்தில் உற்பத்தி, செலவு ஆகிய இரு நியதிகளிலும் விடயங்களை விரிவாக மதிப்பிடுவதில் ஒரே சீரான முறையைக் கைக்கொள்வதனுலும் மேற்கூறிய முறைகளை இத்திருத்தங்கள் நீக்க நாடுகின்றன தற்பொழுதும் மதிப்பீடுகளில் குறைபாடுகள் இருக்கின்றனவெனினும், இலங்கையின் பொருளாதார இயக்கத்தைப்பற்றிக் கிடைக்கக்கூடிய புள்ளி விபரத் தரவுகளில் உள்ள குறைவுத் தன்மைகளின் காரணமாகவே இவை எழுகின்றன. புள்ளி விபரங்களின் தரமும் அவை தழுவும் பகுதியும் எதிர்காலத்தில் சீர்திருந்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. அப்பொழுது இலங்கை மகா வங்கியினுல் தயாரிக்கப்பட்ட தேசிய உற்பத்தியினதும், செலவினதும் மதிப்பீடுகளுக்கு மேலும் சீர்திருத்தங்கள் ஏற்படுத்த முடியும்.

## மதிப்பிடும் முறைகளில் கொண்டுவரப்பட்ட பிரதான மாற்றங்கள்

தற்போதைய மதிப்பீடுகளில் புகுத்தப்பட்ட மிக முக்கியமான மாறுபாடுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

### ஏற்றுமதிக்கான உற்பத்தி—அட்டவணை II—2ன் விடயம் 1.

இதுவரையில் ஏற்றுமதிக்கான நிகர உற்பத்தியின் மதிப்பீடுகள், உள்நாட்டு ஏற்றுமதிகளின் ஏற்றுமதி விலைப் பெறுமானத்திலிருந்து, இறக்குமதி செய்யப்பட்டு உபயோகிக்கப்பட்ட பொருட்களைக் கழித்துக் கணிக்கப்பட்டன. தற்போதைய மதிப்பீடுகளில் கொண்டுவரப்பட்ட சீர்த்திருத்தங்கள் மூன்று வகைப்படும்.

முதலாவதாக கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்களை அறியக் கூடியவரையில் இவற்றின் பெறுமானம் திருத்தியமைக்கப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது. தேயிலையினதும், இரப்பரினதும் கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்களை உற்பத்தியினதும், ஏற்றுமதியினதும் எண்தொகைகளைக்கொண்டு மதிப்பிடலாம். இவைகள் கணக்கீட்டில் சேர்க்கப்பட்டுள்ளன. தெங்குப் பொருட்களைப் பொறுத்தவரையிலே இது சாத்தியமாகாது. கடந்த சில ஆண்டுகளில் தேயிலையினதும், இரப்பரினதும் கையிருப்புக்களின் பெறுமானத்தில் ஏற்பட்ட மாற்றங்களை நோக்கும்பொழுது இவற்றைக் கணக்கீட்டில் சேர்க்கத் தவறுவது ஒரு குறிப்பிடத்தக்க குறையாகும்.

இரண்டாவதாக, ஏற்றுமதிக்கான உற்பத்தியில் உபயோகிக்கப்பட்ட இறக்குமதிப் பொருட்களின் தற்போதைய மதிப்பீடுகள் இறக்குமதி செய்யப்பட்ட எரி பொருட்களையும் உள்ளடக்கி, கணக்கீட்டில் சேர்க்கும்படியாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. ஏனெனில் இறக்குமதி செய்யப்பட்ட எரிபொருட்கள் தோட்டத் தொழிற்சாலைகளினது இயக்கங்களிலும், இறக்குமதிப் பொருட்களை ஏற்றியிறக்குவதிலும் உபயோகப்படுத்தப்படுகின்றன. ஏற்றுமதித் துறையினுல் உபயோகிக்கப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட எரிபொருட்கள் கணக்கீட்டில் கழிக்கப்படாதிருப்பது, ஏற்றுமதிக்கான உற்பத்தியின் நிகர விளைவை ஓரளவு அதிகமாக மதிப்பிட ஏதுவாக இருந்திருக்கலாம்.

மூன்ருவதாக, தற்போதைய மதிப்பீடுகள் இறக்குமதிப் பொருட்களைத் திருப்பி ஏற்றுமதி செய்யும் வர்த்தகத் தொழிலால் கட்டப்பட்ட உற்பத்திப் பெறுமானங்களையும் சேர்த்துக் கணிக்கப்பட்டுள்ளன. இது ஓரளவு சிறிய விடயமாக இருப்பினும், கொள்கை அடிப்படையை நோக்கும்பொழுது இதை அடக்குவது விரும்பத்தக்கதாகும்.

### குடியிருப்புக்களின் உடைமை—அட்டவணை II—2ன் விடயம் II (iv)

குடியிருப்புக்களின் வாடகை மதிப்பீடுகளின் உள்ளடக்கம் முன்னர் புறக்கணிக்கப்பட்ட கிராம வாடகைகளுக்கான ஒரு மதிப்பீட்டை இணைத்திருப்பதின் பயனுக சீர்திருத்தப்பட்டுள்ளது. குடியிருப்புக்களின் மொத்த வாடகைகள், சகல கட்டடங்களின் மதிப்பிடப்பட்ட மொத்த வாடகைகளில் 75 சதவீதமாக அமையும் எனக் கருதப்படுகின்றது.

## சந்தை விலைகளில் உள்நாட்டு உபயோகத்திற்காக உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களும் சேவைகளும்—அட்டவணை II—10ன் விடயம் ஆ (i)

தற்போதைய மதிப்பீடுகளில் உள்நாட்டுத் தனிப்பட்டோரின் நுகர்ச்சிக்காக உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள், விற்பனை செய்யப்பட்டுள்ளன என்று கருதப்படும் பொருட்களின் அளவுக்கு மட்டுமே, சில்லறை விலைகளில், விலைமதிக்கப்பட்டுள்ளன. முந்தைய கணக்கீடுகளில் ஓர் உலக மதிப்பின் படி உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட இப்பொருட்களில் 50 சதவீதம் மட்டுமே விற்பனை செய்யப்பட்டது. எஞ்சிய 50 சதவீதம் ஜீவனத்துக்கான உற்பத்தியில் அடக்கப்பட்டுள்ளது. தற்போதைய கணக்கீடுகளில் இவ்வுலக உத்தேசமாகிய 50 சதவீதம் கைவிடப்பட்டதுடன் சந்தை விலையில் உள்நாட்டு நுகர்ச்சிக்காக உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின்மீது ஒரு படிப்படியான கணக்கீடு செய்வதனால் விற்பனை செய்யப்பட்ட ஒவ்வொரு வகையான பொருட்களினதும் சதவீதம் சம்பந்தமான விபரிக்கப்பட்ட உத்தேசங்களின் அடிப்படையை இது தழுவியதாகும். (உத்தேசத்தின்படி விற்பனை செய்யப்பட்ட விகிதங்கள்—பங்கீட்டுக்கு வெளியே நுகர்ச்சி செய்யப்பட்ட உள்நாட்டு அரிசி, 40 சதவீதம்; தெங்கு உற்பத்திப் பொருட்கள்—60 சதவீதம்; ஏனைய உணவுப் பயிர்கள்—50 சதவீதம்; வெற்றிலையும் பாக்கும்—80 சதவீதம்; விறகு—30 சதவீதம்; கால்நடைப் பொருட்கள்—80 சதவீதம்; மீன்—95 சதவீதம்; பலவகைப்பட்ட விவசாய, வனவியற் பொருட்கள்—50 சதவீதம்; தேயிலையும் புகையிலையும், கைத்தொழிற் பொருட்களும்—100 சதவீதம்) ஐக்கிய நாடுகளின் புள்ளி விபரக் காரியாலயத்தின் சிபார்சுகளுக்கு இணங்க விற்பனை செய்யப்படாத, அதாவது ஜீவனத்திற்கான, உற்பத்தி உற்பத்தியாளர்களின் விலைகளில் மதிப்பிடப்பட்டுள்ளது. (களஞ்சியச் செலவுகள் ஏதும் இருந்தால், அத்துடன் உற்பத்தியாளர்களின் இலாப ஓரங்களையும் சேர்த்து) எனினும், இதுதான் மிகவும் சரியான முறையா என்பது விவாதத்திற்குரியது.

இதற்கெதிராக ஜீவனத்திற்குரிய உற்பத்தியும் சில்லறை விலைகளில் விலை மதிக்கப்படல் வேண்டும் என்ற ஒரு கருத்தும் உண்டு. உற்பத்தியாளர்கள் தங்கள் தேவைகளைத் தாங்களே உற்பத்தி செய்யாதிருந்தால் இவற்றைச் சந்தையிலேயே கொள்வனவு செய்திருப்பார்கள் என்ற ஆதாரத்தைக்கொண்டு இக்கருத்தை ஆதரிக்கமுடியும். இக்கருத்தின் தகைமைகள் யாதெனினும், முக்கியமாகக் குறிக்கப்படவேண்டியது என்னவென்றால், சில்லறை விலைகளில் விலை மதிப்பிடத் தீர்மானிக்கப்பட்டதும், உற்பத்தியாளர்களுக்கு நெருங்கிய கிராமச் சந்தைகளில் நடமாடும் சில்லறை விலைகளையே இவற்றில் உபயோகிக்கப்பட வேண்டும். உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் சம்பந்தமாகத் தற்போது கிடைக்கக்கூடிய சில்லறை விலைகளின் தரவுகள் பெரும்பாலும் நகரங்களில் நிலவும் சில்லறை விலைகளை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன என்றும், கிராமச் சந்தைகளில் நிலவும் விலைகளை அடிப்படையாகக் கொண்டனவன்று என்றும் கருதப்படுவதால்தான் தற்போதைய மதிப்பீடுகளில் உற்பத்தியாளர்களின் விலைகளில் விலை மதிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## உள்நாட்டுப் பிரயாணம்—அட்டவணை II—10ன் விடயம் ஆ (iii)

கடந்த காலத்தில் புகையிரதம், மோட்டார் பஸ், ரொலி வண்டி, டிறம் வண்டி ஆகியவற்றால் பிரயாணிகளின் போக்குவரத்து மட்டும் கணக்கீட்டில் சேர்க்கப்பட்டது. இவ்விடயம்பற்றி முழு விபரங்களையும் கொடுப்பதற்காக தற்போதைய மதிப்பீடுகளில் ஏனைய வகைப் போக்குவரத்து, உதாரணமாக, வாடகை வண்டி, சொந்த மோட்டோர் வண்டி, மோட்டோர் சைக்கிள் போன்றவைகளின் மூலம் பிரயாணிகளின் போக்குவரத்து சேர்க்கப்பட்டுள்ளன.

## வர்த்தகம் (அரசாங்கம் அல்லாத, ஏற்றுமதிக்கு அல்லாத)—அட்டவணை II—2ன் விடயம் II (vi)

## ஏற்றியிறக்கல் (அரசாங்கம் அல்லாத, ஏற்றுமதிக்கு அல்லாத)—அட்டவணை II—2ன் விடயம் II (vii)

தற்போதைய மதிப்பீடுகளில் மிகவும் முக்கியமான திருத்தங்கள் வர்த்தகமும், ஏற்றியிறக்கலும் சம்பந்தமான (அரசாங்கம் அல்லாத ஏற்றுமதிக்கு அல்லாத) விடயங்களிற்தான் கொண்டுவரப்பட்டுள்ளன. உள்நாட்டு உபயோகத்திற்காக உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களில் பங்கீட்டுச் செலவுதான், வர்த்தகம் ஏற்றியிறக்கல் ஆகிய இரண்டின் தொகையிலும் ஏற்படும் ஒரு பிரதான கூறாகும். இக்கூறு தற்போதைய மதிப்பீடுகளில், பங்கீட்டு அரிசி (1) நீக்கிய (செலவு முறையாக மதிப்பிடப்பட்ட) இந்த உள்நாட்டு உற்பத்திப் பொருட்களின் சந்தை விலை மதிப்பிற்கும், அதே பொருட்களின் (உற்பத்திமுறைப்படி மதிப்பிடப்பட்ட) உற்பத்தியாளர்களின் பெறுமானத்திற்குமிடையே உள்ள மொத்த வித்தியாசத்தைக் கணித்தும் நுகர்ச்சி மான்யம் தவிர்த்த மறைமுக வரிகள் பொருட்டு இம்மொத்த வித்தியாசத்தைத் திருத்தியமைத்தும் மதிப்பிடப்பட்டுள்ளது.

முந்தைய மதிப்பீடுகளிலும் இவ்வகையான வழிவகைகளே மேற்கொள்ளப்பட்டபொழுதிலும் இவை தற்போதைய முறையிலிருந்து சில முக்கியமான விதங்களில் வித்தியாசப்படுகின்றன. முந்தைய மதிப்பீடுகளில் உள்நாட்டு உபயோகத்திற்காக உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட சகல பொருட்களின் (செலவு வழியில்) சந்தைப் பெறுமானத்தையும் (உற்பத்தி வழியில்) உற்பத்தியாளர்களின் பெறுமானத்தையும் இதே முறையில் ஒப்பிடுதல் செய்யப்பட்டுள்ளது. இப்படிக் கிடைக்கப்பெற்ற வித்தியாசம், சகல மான்யங்களும் நீக்கப்பட்ட மறைமுக வரிகளுக்கெனத் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. இதன்பின் திருத்தியமைக்கப்பட்ட வித்தியாசத்தின் 50 சதவீதத்தை மட்டுமே வர்த்தகத்துக்கும் ஏற்றியிறக்கலுக்கும் உரி

---

(1) பங்கீட்டு அரிசியின் வர்த்தக ஏற்றிறக்கற் செலவுகள் மற்றோரிடத்தில் (அரசாங்க உற்பத்தியின் கீழ்) சேர்க்கப்பட்டிருப்பதால் பங்கீட்டு அரிசி கணக்கீட்டில் இருந்து நீக்கப்பட்டுள்ளது.

யதாகச் சாட்டுதல் செய்யப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களில் 50 சதவீதம் மட்டுமே விற்பனை செய்யப்பட்டது என்று கொள்ளப்பட்டமையே. எஞ்சிய 50 சதவீதம் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

இம்முறை சம்பந்தமான சில திருப்திகரமற்ற அம்சங்கள் பின் வருவன. முதலாவதாக, இப்பொருட்களின் உற்பத்தியாளர்களின் விலைமதிப்புக்களில் உற்பத்தியாளர்களின் மான்யங்களும் உள்ளடங்கியபடியால் சில்லறை விலைப் பெறுமானத்திற்கும், உற்பத்தியாளர்களின் பெறுமானத்திற்கும் இடையேயுள்ள மொத்த வித்தியாசத்தைத் திருத்தியமைப்பதற்கு எல்லா மான்யங்களும் நீக்கப்பட்ட மறைமுக வரிகளைக் கழித்தல் கூடாது; நுகர்ச்சி மான்யங்களை மட்டும் தவிர்த்த மறைமுக வரிகளைக் கழிப்பதே முறையாகும். இரண்டாவதாக, செலவீட்டு வழியில், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட எல்லாப் பொருட்களினது பெறுமானமும் சில்லறை விலைகளிலேயே கணிக்கப்பட்டுள்ளது. எனினும் வர்த்தகத்திற்கும் ஏற்றியிறக்கலுக்கும் ஆன செலவு இப்பொருட்களில் விற்பனை செய்யப்பட்ட 50 சதவீதம் சம்பந்தமாகவே ஏற்பட்டது என உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனால் உற்பத்தி வழியினிடையேயும், செலவு வழியினிடையேயும் ஒரு பாரதூரமான முரண்பாடு ஏற்படும். இது சந்தையேறாத 50 சதவீதப் பொருட்கள் சம்பந்தமாகக் கணிக்கப்பட்ட வர்த்தக ஏற்றியிறக்கற் செலவுகளை உற்பத்தி வழியால் வர்த்தக ஏற்றியிறக்கல் விடயங்களுடன் சேர்க்கப்படாவிடில் ஏற்படுகின்றது.

உற்பத்திமுறை மதிப்பீடுகள் சற்றும் செலவுமுறை மதிப்பீடுகளுடன் சார்பற்ற தனிப்பட்டவைகளாயிருக்க, இவ்விரு வழிகளாற் கிடைத்த மதிப்பீடுகளை ஒப்பியல்பார்க்க முயற்சிக்காமலும் இருந்தால், இந்தப் பிரதானமான முரண்பாட்டைத் துலக்கமாக்காமல் விட்டிருக்கலாம். ஆனால் உற்பத்தி மதிப்பீடுகளுடன் செலவு மதிப்பீடுகளை ஒப்பியல்பார்க்க முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றபடியால் விற்பனை செய்யப்படாத உற்பத்தியின் சில்லறை விலைப் பெறுமானத்திற்கும், உற்பத்தியாளர்களின் விலைப் பெறுமானத்திற்கும் சமமான தொகை கணிக்கப்பட்டு உற்பத்திப் பகுதியில் சேர்க்கப்படவேண்டும். அல்லாவிடில் இந்தத் தொகை புள்ளிவிபரப் பொருத்தமின்மையில் பிரதிபலிக்கும். முந்தைய மதிப்பீடுகளில் உற்பத்தி வழியாலும், செலவு வழியாலும் கிடைத்த மதிப்பீடுகளை ஒப்பியல்வாக்க வேண்டும் என்ற கருத்துப்படி முன் கூறிய கணிப்பு இல்லாதபொழுதும், புள்ளி விபரப் பொருத்தமின்மை மிகச் சிறிதாகவே இருந்தமை இவ்வாக்குவாதத்தைக் குழப்பவில்லை. செலவின் வழியாலும், உற்பத்தி வழியாலும் கிடைத்த மதிப்பீடுகளுக்கிடையே மிகவும் பெரியதொரு புள்ளிவிபர முரண்பாடு இருந்ததையே இது காட்டுகின்றது. இப்பெரிய முரண்பாடு ஜீவனத்திற்கான உற்பத்தி சம்பந்தமாக, உற்பத்திப் பகுதியில் புகுத்தப்பட்ட வர்த்தக ஏற்றியிறக்கல் விடயத்தைக் கணக்கீட்டில் சேர்க்கத் தவறியதன் விளைவாக எற்பட்ட (கடந்த சில ஆண்டுகளில் 1500 இலட்சம் ரூபாய்களுக்கு மேலதிகமான) முரண்பாட்டை ஈடுசெய்தது.

தற்போதைய மதிப்பீடுகள் முந்தைய வழக்கத்தைப் பின்பற்றி, மொத்தப் பங்கீட்டுச் செலவை (உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களும், இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களும் உள்பட) வர்த்தகமும் ஏற்றியிறக்கலும் என்ற தொகுதிகளுக்கிடையே வர்த்தகத்திற்கு 70 சதவீதமும், ஏற்றியிறக்கலுக்கு 30 சதவீதமும் என ஒதுக்கப்பட்டுள்ளன. எனினும் மதிப்பிடப்பட்ட வர்த்தகத்தின் நிகர உற்பத்தி, முன்பு வழக்கத்தால் இருந்த மதிப்பீடுகளிலிருந்து வர்த்தகக் கட்டடங்களின் வாடகைகளைக் கழிக்காத விதத்தில் வேறுபடுகின்றது. வர்த்தகக் கட்டடங்களின் வாடகைகள் குடியிருப்புக்களின் உடமையில் சேர்க்கப்படாத காரணத்தால் இவ்விதம் இங்கு கழித்தல், கொள்கைப்படி தவறாகும். (வேறு விதத்தில் இரட்டைக் கணிப்பு ஏற்பட்டிருந்தால் ஒழிய இவ்வாறு கழித்தல் நியாயமாகாது.)

பொருட்களின் ஏற்றியிறக்கலின் பெறுமானத்திற்கு மேலாக தற்போதைய ஏற்றியிறக்கல் மதிப்பீடுகள் புகையிரதம், மோட்டோர் பஸ், ரொலி வண்டி, டிரும் வண்டி, வாடகை வண்டி, தனிப்பட்டோரின் மோட்டோர் வண்டி ஆகியவற்றில் பிரயாணிகளை ஏற்றியிறக்கிய பெறுமானத்தையும் சேர்த்துள்ளன. ஏற்றியிறக்கலின் நிகர உற்பத்தி இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களைக் கவனமாகக் கழித்தபின் கிடைக்கப்பெற்றது.

## அரசாங்கத்தின் நிகர உற்பத்தி (வேறு விடயங்களில் சேர்க்கப்படாதவை)— அட்டவணை II—2ன் விடயம் II (viii)

நியமமான வழக்கங்களைப் பின்பற்றி அரசாங்கத்தின் நிகர உற்பத்தி அரசாங்க ஊழியர்களின் (1) மொத்த நஷ்டஈட்டைக்கொண்டே கணிக்கப்பட்டுள்ளது. தற்போதைய மதிப்பீடுகள் முந்தியவைகளிலிருந்து மாறுபடுவதற்குக் காரணங்கள் பின்வருமாறு: (i) சொந்த நஷ்டஈட்டின் ஒரு கூறாக வாடகை உதவிச் சம்பளம் சேர்க்கப்பட்டுள்ளபொழுதிலும், பிரயாண உதவிச் சம்பளம் சேர்க்கப்படவில்லை. (ii) அரசாங்கக் கட்டடங்களின் வாடகைக்கெனச் சுமத்தப்பட்ட ஒரு தொகையும் சேர்க்கப்பட்டுள்ளது. (iii) அரசாங்கத்தினால் உண்மையாகக் கொடுக்கப்பட்ட உபகாரச் சம்பளங்கள், அரசாங்கத்தினால் உபகாரச் சம்பள நிதிக்குக் கொடுத்த உதவுத் தொகைக்குப் பதிலாகச் சேர்க்கப்பட்டுள்ளன. (சம்பள நிதிக்குக் கொடுக்கும் உதவுத்தொகைக்குப் பதிலாக உண்மையாகக் கட்டப்பட்ட உபகாரச் சம்பளங்களை அரசாங்க ஊழியர்களின் கூலிகளிலும், சம்பளங்களிலும் ஒரு பகுதியெனச் சேர்த்தல் ஐக்கிய நாடுகளின் புள்ளி விபரக் காரியாலயத்தினால் புதிதாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.)

---

(1) உதவி பெறும் பாடசாலைகளிலும், பல்கலைக்கழகங்களிலும் உள்ள ஆசிரியர்கள் புள்ளி விபர வசதிக்காக அரசாங்க ஊழியர்கள் என வகுக்கப்பட்டுள்ளனர்.

### வெளிநாட்டிலிருந்து வந்த நிகரச் சினை வருமானம்—அட்டவணை II—2ன் விடயம் (iv)

இவ்விடயம் வெளியே கொடுத்த முதலீட்டு வருமானம் நீக்கப்பட்ட, வெளிநாட்டிலிருந்து பெற்ற முதலீட்டு வருமானத்திற்குச் சமமாகும் எனக் கூறலாம். வில்லியம்சின் அறிக்கையில் வெளிநாட்டிலிருந்து வந்த வருமானம் வெளியே கொடுத்த வருமானத்தைக் கழிக்காமல் மொத்தமாகவே எடுக்கப்பட்டதுடன் வெளிநாட்டுப் பிரயாணம் சம்பந்தமான வரவுகளும், தனிப்பட்டோரின் நன்கொடைகளும், குடிபெயர்வோர் மாற்றங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. இவை சேர்க்கப்பட்டது முறையன்று.

### தனிப்பட்டோரின் நுகர்ச்சிக்காக இறக்குமதி செய்யப்பட்ட சினைக்கோள் அல்லாத சேவைகள்—அட்டவணை II—3ன் விடயம் I—அ (ii)

''வெளிநாட்டுப் பிரயாணம்'', ''ஏற்றியிறக்கல்'', ''காப்புறுதி'', ''பலதரப்பட்டவை'' என்ற சென்மதி நிலுவைத் தலைப்புக்களின் கீழ் சகல தனிப்பட்டோரின் சினைக்கோள் அல்லாத ஈருன சேவைகளின் கொள்வனவுகளை இயன்றளவு விரிவாக இவ்விடயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட உணவினதும், சொந்த நுகர்ச்சிப் பொருட்களினதும் சில்லறைப் பெறுமானங்களில் முன்னரே சேர்க்கப்பட்ட சேவைகளை இருமுறை கணிப்பதைத் தவிர்க்கவேண்டிய கவனம் எடுக்கப்பட்டிருக்கிறது. முந்தைய மதிப்பீடுகளில் சினைக்கோள் அல்லாத சேவைகளின் கணக்கீட்டில் வெளிநாட்டுப் பிரயாணத்தை மட்டுமே சேர்த்தபடியால் இக்கணக்கீட்டில் சேர்க்கப்படவேண்டிய முழுமையான சேவைகளும் உள்ளடக்கப்படவில்லை என்பது தெளிவாகின்றது.

### வதிவற்றவர்களால் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களும், சேவைகளும்—அட்டவணை II—3ன் விடயம் I இ.

வதிவற்றவர்களால் இலங்கையிற் செய்யப்பட்ட சுற்றுப் பயணச் செலவுகள் மட்டுமே முந்தைய மதிப்பீடுகளின் கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளன. தற்போதைய மதிப்பீட்டில் சுற்றுப் பயணத்தர் செலவோடு ஏற்றியிறக்கலின்மீதும், காப்புறுதியின்மீதும் (திருப்பி ஏற்றுமதி செய்யப்பட்டவை என்ற விடயம் நீக்கி) வதிவற்றவர்களின் செலவுகளும், அந்நிய அரசாங்கங்களின் தூதுவராலயங்களினதும் ஏனைய செலவுகளும், பலதரப்பட்ட விடயங்களும் கணக்கீட்டில் சேர்க்கப்பட்டுள்ளன.

### அரசாங்க நுகர்ச்சி—அட்டவணை II—3ன் விடயம் II.

முந்தைய மதிப்பீடுகளில், அரசாங்கத்தின் நுகர்ச்சிச் செலவைக் காண்பதற்கு, அரசாங்கத்தின் நடைமுறைச் செலவிலிருந்து. மற்ற விடயங்களுடன் ''மூலதனப் பொருட்கள் அல்லாத அரசாங்கத்தின் இறக்குமதிகளும்'' நீக்கப்பட்டன. அரசாங்க நுகர்ச்சியை மதிப்பிடும்பொழுது இவ்விதம் அரசாங்கத்தினுல் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை நீக்குவது கொள்கைத் தவருகும்.

அரசாங்க நுகர்ச்சியின் தற்போதைய மதிப்பீடு அரசாங்கக் கட்டடங்களின் வாடகைகளைக் குறிக்கும் ஒரு சுமத்தப்பட்ட தொகையையும் சேர்த்துள்ளது. குடிசனமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினுல் கடந்த ஆண்டுகளில் ஐக்கிய நாடுகளுக்கு அனுப்புவதற்காகத் தயாரிக்கப்பட்ட தேசிய செலவு மதிப்பீடுகளில் இச்சீர்திருத்தம் புகுத்தப்பட்டுள்ளது.

### தனிப்பட்டோர் துறையின் மொத்த நிலையான மூலதன ஆக்கம்—அட்டவணை II—2ன் விடயம் அ. I.

இவ்விடயத்திற்காக மதிப்பீடுகள் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களினதும், சில அரசாங்க முயற்சிகளினதும் (உதாரணமாக புகையிரதம், மின்சாரம் போன்ற முயற்சிகள்) மூலதன ஆக்கத்தையம் அடக்கும். தற்போதைய மதிப்பீடுகளில் இவ்விடயத்தின் உள்ளடக்கம் நியாயமான அளவு சீர்திருத்தப்பட்டுள்ளது. முதலாவதாக, புனர் பயிர்நடுகையோடு, மாற்று நடுகையும் சேர்க்கப்பட்டுள்ளது. இரண்டாவதாக, அதிகமான ஏனையவித மூலதன ஆக்கத்தின் மதிப்பீடுகள், மூலதனப் பொருட்களின் இறக்குமதிகள் சம்பந்தமாக மறைமுகமான வழிகளை அடிப்படையாகக்கொண்டிருந்தபோதும், மூலதனப் பொருட்களின் சகல இறக்குமதிகளையும் சம்பூரணமாகவும் கண்டிப்பாகவும் பாகுபடுத்தியதன் மூலம் சீர்திருத்தப்பட்டுள்ளன. உதாரணமாக, கட்டடங்களினதும், ஏனைய சில ஆக்க வேலைகளினதும் மதிப்பீட்டில், கட்டட வேலைக்கும் ஆக்க வேலைக்குமான பொருட்களின் மொத்த இறக்குமதிகள், அரசாங்கத்தினது மூலதனப் பொருட்களின் இறக்குமதிகளையும் (அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் உபயோகத்திற்காக அரசாங்கத்தினுல் இறக்குமதி செய்யப்பட்டவைகளைத் தவிர்த்து) திருப்பி ஏற்றுமதி செய்யப்பட்ட மூலதனப் பொருட்களையும் கழிப்பதனுல் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. கட்டடத்தினதும், ஏனைய சில ஆக்க வேலைகளினதும், மூலதன ஆக்க மதிப்பீடு வழக்கமான $\frac{10}{8}$ ஆகிய பெருக்கு எண்ணைத் திருத்தியமைக்கப்பட்ட தனிப்பட்டோரின் மூலதனப் பொருட்களின் இறக்குமதிப் பெறுமானத்துடன் பிரயோகிப்பதினுல் கிடைக்கப்பெற்றதாகும். இயந்திரத்தினதும், பொறிகளினதும் மூலதன ஆக்க மதிப்பீடு, உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட பொறிகளின் மூலதன ஆக்கத்துடன், இறக்குமதி செய்யப்பட்ட பாரமான பொறிகளினதும் (கட்டடத்தை ஸ்தாபிக்கும் கூலிகள் உள்பட) இறக்குமதி செய்யப்பட்ட ஏனைய பொறிகளினதும் மூலதன ஆக்கத்தையும் கூட்டுவதனுல் கிடைக்கப்பெற்றதாகும். மூலதன ஆக்கத்தின் மதிப்பீடுகள், இறக்குமதி செய்யப்பட்ட போக்குவரத்து உபகரணங்களும், இறக்குமதி செய்யப்பட்ட ஏனைய மூலதனப் பொருட்களும் என்ற முறையிலும் கணிக்கப்பட்டுள்ளன.

### தனிப்பட்டோரின் உள்நாட்டு மூலதன ஆக்கம்—அட்டவணை II—3ன் விடயம் III.
### அரசாங்கத்தின் உள்நாட்டு மூலதன ஆக்கம்—அட்டவணை II—3ன் விடயம் IV.

இத்தலையங்கங்களின் கீழ் நிலையான மூலதன ஆக்கத்துடன், கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்களும் சேர்த்துக் கணிக்கப்பட்டுள்ளன. கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்களைக் கணக்கீட்டில் சேர்க்காவிட்டால் நுகர்ச்சி, மூலதன ஆக்கம் ஆகியவற்றின் தொகைப் பெறுமானம், உற்பத்தியினது பெறுமானத்திலிருந்து வேறுபடும். எனவே உற்பத்தி, செலவு ஆகிய இருவித மதிப்பீடுகளிலும் ஒரே முறையைக் கையாளுவது அத்தியாவசியமாகின்றது.

### தனிப்பட்டோர் துறையில் ஏற்பட்ட மூலதன அபிவிருத்தியின் நிகர உற்பத்தி (பொருட்களும், சேவைகளும்)—அட்டவணை II—2ன் விடயம் II (iii) (ஆ)

இத்தலைப்பின் கீழ் உண்மையான ஆக்கக் கைத்தொழில்களின் நிகர உற்பத்தி மட்டுமின்றி உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட ஆக்க வேலைப் பொருட்களின் உற்பத்தியிலும், ஏற்றியிறக்கலிலும் ஈடுபட்டுள்ள கைத்தொழில்களினது நிகர உற்பத்தியும் சேர்க்கப்பட்டுள்ளது. ஆகவே நிகர உற்பத்தியின் தற்போதைய மதிப்பீடுகள், தற்போதைய மூலதன ஆக்கத்தின் மதிப்பீடுகளிலிருந்து, இறக்குமதி செய்து உபயோகிக்கப்பட்ட மூலதனப் பொருட்களின் பெறுமானத்தையும், இவைகளின்மேல் விதிக்கப்பட்ட இறக்குமதி வரிகளையும், பங்கீட்டுச் செலவுகளையும் கழித்தபின் பெறப்பட்டவை. முந்தைய மதிப்பீடுகளில் பங்கீட்டுச் செலவுகள் கழிக்கப்படவில்லை. இறக்குமதி செய்யப்பட்ட மூலதனப் பொருட்களினது பங்கீட்டுச் செலவுகள் வர்த்தகமும், ஏற்றியிறக்கலும் என்ற தலைப்பின்கீழ் சேர்க்கப்பட்டிருப்பதன் நிமித்தம் இரட்டைக் கணிப்பு ஏற்பட்டிருக்கலாம்.

### உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களும், சேவைகளும், வேறு விடயங்களில் சேர்க்கப்படாதவை—அட்டவணை II—10ன் விடயம் ஆ. (iv)

இத்தலைப்பின் கீழ் உள்ள விடயங்களின் உள்ளடக்கம் சீர்திருத்தப்பட்டுள்ளது.

## அட்டவணைகளுக்கான மேலதிகக் குறிப்புகள்

### அட்டவணை II—4 நடைமுறை விலைகளில் மொத்த தேசிய உற்பத்தியின் மேல் ஏற்பட்ட செலவு

இவ்வட்டவணையின் இடதுபக்கத்தில் உற்பத்தி முறைப்படி சந்தை விலைகளில் கணிக்கப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் மதிப்பீடு கொடுக்கப்பட்டுள்ளது. இது (உள்ளூராட்சி வரிகள் உட்பட) மறைமுக வரிகளின் கூட்டுத் தொகையிலிருந்து, சினைக்கொள் விலைகளில் மொத்த தேசிய உற்பத்திக்கு அளிக்கப்பட்ட மானியத்தைக் கழித்துப் பெறப்பட்டதாகும். அட்டவணையின் வலது பக்கத்தில் 4ல் இருந்து 11 வரையுள்ள விடயங்கள் செலவு முறைப்படி கணிக்கப்பட்ட மதிப்பீடுகளாகும். விடயம் 11உம் (சந்தை விலைகளின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தியின்மேல் ஏற்பட்ட செலவும்), விடயம் 12உம் (வெளிநாட்டிலிருந்து வந்த நிகரச் சினைவருமானமும்), மொத்தத் தேசிய செலவுடன் (அட்டவணை II—3ன் விடயம் VII) நுண்ணியமாகச் சமமாகின்றது.

சில நிபந்தனைகளின் கீழ்ப்பட்ட பின்னர் விடயம் 11, விடயம் 12 ஆகியவற்றின் கூட்டுத் தொகை விடயம் 14உடன் (சந்தை விலைகளின்படி மொத்த தேசிய உற்பத்தியின்மேல் ஏற்பட்ட செலவு) சமமாகும். இந்நிபந்தனைகள் பின்வருமாறு: முதலாவதாக உற்பத்தி, செலவு ஆகிய இருமுறை மதிப்பீடுகளிலும் விடயங்களின் பெறுமானங்கள் பரஸ்பர முரண்பாடில்லாத அடிப்படையிலமையவேண்டும்; இரண்டாவதாக, சகல கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்களும் நிரூபிக்கப்படல் வேண்டும்; மூன்றாவதாக, உற்பத்தியினதும், செலவினதும் முறைகளில் உள்ள விடயங்களின் விபரமான மதிப்பீட்டில் முறையே உபயோகிக்கப்பட்ட வெவ்வேறான விபரங்களுக்கிடையில் புள்ளிவிபர முரண்பாடுகள் இருக்கக்கூடாது. தற்போதைய மதிப்பீடுகளைத் தயாரிப்பதில் இரு தெளிவான முறைகளிலுள்ள விலை மதிப்புக்களும் பரஸ்பர முரண்பாடில்லாத அடிப்படையில் உள்ளவைகளாக இருக்கச்செய்ய சகல முயற்சிகளும் எடுக்கப்பட்டன. சாத்தியமாகும் வரையில் கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்கள் கணக்கீட்டில் சேர்க்கப்பட்டுள்ளன. ஆயினும் கையிருப்புக்களில் ஏற்பட்ட நிரூபிக்க முடியாத மாற்றங்களாலும், கிடைக்கக்கூடிய புள்ளி விபரங்களிலுள்ள குறைபாடுகளின் பயனாகவும் 11ம், 12ம் விடயங்களின் கூட்டுத் தொகை விடயம் 13ல் காட்டப்பட்டுள்ள தொகையால், விடயம் 14ல் இருந்து வேறுபடுகின்றது. எனவே விடயம் 13, கையிருப்புக்களில் ஏற்பட்ட நிரூபிக்கமுடியாத மாற்றங்களினதும், புள்ளி விபர முரண்பாடுகளினதும் அட்சரக் கணிதக் கூட்டுத் தொகையைக் குறிக்கின்றது.

### அட்டவணை II—5: நிலையான சிணக்கோள்விலைகளின்படி மொத்தத் தேசிய உற்பத்தி

### அட்டவணை II—7: நிலையான சந்தை விலைகளில் நுகர்ச்சிச் செலவும், மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கமும்

நிலையான விலைகளில் உற்பத்திக்கும் செலவுக்குமான மதிப்பீடுகள் விரிவாக்கப்படக்கூடிய அளவுக்கு விடயங்களின் கூறுகளினதும் விலையேற்றத்தை நீக்கும் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. விலை வீக்கத்தை நீக்கும் கருவிகளாகப் பாவிக்கப்படக்கூடிய விலைக் குறிகாட்டிகள் உடனடியாகக் கிடைக்காத சந்தர்ப்பத்தில் விசேடக் குறிகாட்டிகள் இயற்றப்பட்டன. உதாரணமாக, ஏற்றுமதிக்கான உற்பத்தியின் மதிப்பீட்டில் நிலையான விலையில் பிரதான ஏற்றுமதிப் பண்டங்களுக்கு மட்டும் வெவ்வேறான மதிப்பீடுகள் கணிக்கப்பட்டது மட்டுமின்றி, இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் பிரதான கூறுகளும் தனித்தனியே தம்மிலேற்பட்ட விலை வீக்கம் நீக்கப்பட்டதுடன், சில கூறுகளுக்குப் புதிய விலைக் குறிகாட்டிகளும் தயாரிக்கப்பட்டுள்ளன. தனிப்பட்டோரின் நூர்ச்சிக்காக உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் கீழ் சேர்க்கப்பட்டுள்ள கால்நடைப் பொருட்கள் போன்ற ஒரு விடயத்திற்கான நிலையான விலையிலுள்ள மதிப்பீடுகள் மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி, ஏனைய இறைச்சிகள், பால், முட்டைகள் ஆகியவற்றின் விலை வீக்கம் தனித்தனியாக நீக்கப்பட்டதன் மூலம் கிடைக்கப்பெற்றனவாகும். தனிப்பட்டோர் துறையில் ஏற்பட்ட மொத்த மூலதன ஆக்கத்தின் நிலையான விலையிலுள்ள மதிப்பீடுகள் சம்பந்தமாக சில கூறுகளுக்கு நிலையான விலையிலுள்ள மதிப்பீடுகள் தனித்தனியே தயாரிக்கப்பட்டுள்ளன. இவைகளாவன: பயிர் நடுகையும், மாற்று நடுகையும்; கட்டட வேலையும், ஏனைய சில ஆக்க வேலைகளும்; இயந்திரமும், பொறிகளும், ஏற்றியிறக்கலும், இறக்குமதி செய்யப்பட்ட மூலதனப் பொருட்களும் (வேறுவிடயங்களில் சேர்க்கப்படாதவை).

நிலையான விலையிலுள்ள அரசாங்கத்தினது நிகர உற்பத்திக்கான மதிப்பீடுகளும், நடைமுறை விலையிலுள்ள மதிப்பீடுகளும் ஒப்பியல்பாகுவது இங்கே விசேடமாக எடுத்துக் கூறத்தக்கது. எனவே, இதனால் உத்தேசிக்கப்பட்டிருப்பது என்னவென்றால் அரசாங்க ஊழியர்களுக்கான மொத்தச் சொந்த நஷ்டஈட்டில் ஏற்பட்ட மாற்றங்கள் இவற்றின் உண்மை உற்பத்தியில் ஏற்பட்ட மாற்றங்களையே முழுமையாகப் பிரதிபலிக்கின்றன. கூர்ந்து பார்க்கும்பொழுது இது சரியானதல்ல என்றாலும், விலைமாற்றங்களை மட்டும் அளக்கக்கூடிய ஒரு குறிகாட்டி கிடைப்பது மிகவும் கடினமானபடியால் இதைவிட வேறு வழி சாத்தியமாகாது. (அரசாங்க ஊழியர்களுக்கான ஒரு கூலி விகிதக் குறிகாட்டி விலை மாற்றங்களை மட்டுமின்றி உண்மையான உற்பத்தியில் ஏற்பட்ட மாற்றங்களையும் பிரதிபலிக்கும்.)

### அட்டவணை II—6: உண்மைத் தேசிய வருமானத்தில் வர்த்தக மாற்று விகிதத்தின் பங்கு

இது சம்பந்தமாக முந்தைய வருடாந்த அறிக்கைகளில் பிரசுரிக்கப்பட்டு வந்த அட்டவணை முற்றிலும் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. முன்னர் பிரசுரிக்கப்பட்ட அட்டவணைகளின் நடைமுறைச் சிணக்கோள்விலைகளின்படியுள்ள மொத்த தேசிய உற்பத்தியில் வர்த்தக மாற்று விகிதத்தல் ஏற்பட்ட பயனும் சேர்க்கப்பட்டுள்ளது. உண்மையான மொத்த தேசிய உற்பத்தியுடன் இது ஒப்பியல்பாகின்றது என உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது கொள்கைத் தவறாகும். நிலையான விலைகளின்படியுள்ள மொத்த தேசிய உற்பத்தி, வர்த்தக விகிதத்தினால் ஏறபட்ட பயனை நீக்கிய உண்மையான மொத்த தேசிய உற்பத்தியைக் குறிக்கும். தற்போதைய மதிப்பீடுகளில் நிலையான விலைகளின்படியுள்ள மொத்த தேசிய உற்பத்தியின் எண்தொகைகள், உண்மையான தேசிய உற்பத்தி (தேய்மானம் உட்பட) எனச் சரியாக விளக்கப்பட்டுள்ளதுடன், வர்த்தக மாற்று விகிதத்தால் ஏற்பட்ட பயனுக்கு மாற்றியமைக்கப்பட்டபின் எஞ்சிய எண் தொகைகள் உண்மைத் தேசிய வருமானம் எனக் கூறப்பட்டுள்ளது.

### அட்டவணை II—12: கைத்தொழில் மூலங்களின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தி, நடைமுறைச் சிணக்கோள்விலைகளின்படி

முந்தைய வருடாந்த அறிக்கைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளில் மேற்கொள்ளப்பட்ட முறைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் ஏற்பட்ட பிரதானமான மாற்றங்கள் பின்வருமாறு:

முதலாவதாக, விவசாயம், வனவியல், கால்நடை, மீன் பிடித்தல், என்ற தொகுதி, சகல விவசாய ஏற்றுமதிகளின் பதனிடுதல்களையும் உள்ளடக்கும். (முந்தைய மதிப்பீடுகள் ஏற்றுமதிக்கான தேயிலையினதும், இரப்பரினதும் பதனிடுதல்களை மட்டுமே அடக்கியிருந்தன.) இரண்டாவதாக, அரசாங்கத் தபாற் தந்திப் போக்குவரத்துச் சேவைகள் முன்போல் அரசாங்கச் சமூக சேவைகளின்கீழ் அன்றி, ஏற்றியிறக்கல், களஞ்சியம், போக்கு வரத்து என்ற தலைப்புகளின்கீழ் சேர்க்கப்பட்டிருக்கின்றன. மூன்றாவதாக, அரசாங்க நிர்வாகமும், பாதுகாப்பும் அரசாங்க கட்டடங்களுக்கான கணிக்கப்பட்ட வாடகைகளையும் சேர்த்துள்ளன. மொத்த தேசிய உற்பத்தியின் விடயங்கள் விபரமாக மதிப்பிடப்படும் முறைகளில், முன்பு விபரிக்கப்பட்ட மாறுபாட்டினால் கிட்டத்தட்ட சகல விடயங்களின் உள்ளடக்கமும் பாதிக்கப்பட்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.